விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 15 திங்கட்கிழமை (27.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 070

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ‘வீதியில் மக்கள்; காணிக்குள் இராணுவம்’ கேப்பாப்பிலவு போராட்டம் தொடர்கிறது



(பனிக்கன்குளம்)

விமானப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, இரவு பகலாக கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் நடத்தி வரும் போராட்டம் நேற்று இருபத்தேழாவது நாளாக தொடர்ந்தது. இந்த நிலையில் இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா அமர்வு இன்று ஆரம்பம்; இலங்கை குறித்து 4 நாள் விவாதம்

(ஜெனிவா)

ஜெனிவாவில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக நான்கு நாட்கள் விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரின் ஆரம்ப நாள் அமர்வில் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ கட்ரஸ் மற்றும்ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசேன் உள்ளிட்டோர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்திய முன்னேற்றங்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணை

24ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க முடியாது!

## ஐ.நாவுக்கும் அறிவித்து விட்டேன்-ஜனாதிபதி



(பொலநறுவை)

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்கான நீதிப்பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க முடியாது என்று ஐ.நாவுக்கும் சக்தி வாய்ந்த மேற்குலக நாடுகளின் தலைவர்களிற்கும் தாம் அறிவித்து விட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம்

## பொலிஸார் முன் இளைஞர் குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் வைத்து பொலிஸார் முன்னிலையில வாள்களுடன் இளைஞர்கள் குழு ஒன்று அட்டகாசம் புரிந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று இரவு 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## வடமராட்சி வதிரிப் பகுதியில் அதிசக்தி வாய்ந்த 78 குண்டுகள் மீட்பு

(கரணவாய்)

விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் அதி சக்தி வாய்ந்த 78 குண்டுகளை வடமராட்சி பகுதியிலிருந்து மீட்ட விசேட அதிரடிப் படையினர் அவற்றை செயலிழக்கச் செய்துள்ளனர்.

வடமராட்சி வதிரி புலவனோடைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை காணி ஒன்றில் தென்னம்பிள்ளைக்கு கிடங்கு வெட்டியபோது வெடிபொருள் ஒன்று

24ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சியில் 15 நாட்களில் 10 கர்ப்பிணிகளுக்கு பன்றிக்காய்ச்சல்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பு மாதத்தில் 15 நாட்களில் மட்டும் 10 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பன்றிக் காய்ச்சல் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் பொது மக்களுக்கு விடுத்துள்ள அவசர வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 10 கர்ப்பிணித்தாய்

23ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலை துணைவேந்தர் தெரிவு பேரா.சிறிசற்குணராஜா முதலிடம்

### முதல் மூவரின் பெயர்கள் சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிற்கான தேர்தலில் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா 17 வாக்குகளைப் பெற்று முதலிடத்துக்கு தெரிவாகியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்திற்கான தேர்தல் நேற்றைய தினம் யாழ்.பல்கலை க்கழகத்தில் நடைபெற்றது.

இத் தேர்தலில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவம் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கில் இன்று ஹர்த்தால் இல்லை

(யாழ்ப்பாணம்)

கேப்பாப்பிலவு மக்களின் மணமீட்பு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஆதரவு தெரிவித்து வடமாகாணம் முழுவதும் இன்றைய தினம் பூரண ஹர்த்தால் மேற்கொள்ளவுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இருப்பினும் இன்றைய தினம் மேற்கொள்ளவிருந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்ய முற்பட்டவர்களே பிற்போட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு கேப்பாப்

24ஆம் பக்கம் பார்க்க...

## மங்கள, ஜயம்பதி ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் நேற்று ஜெனிவா பயணமாகியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அரசாங்க தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி

24ஆம் பக்கம் பார்க்க...

## எழுச்சி மிகு பாடல்களை பாடிய தலைசிறந்த பாடகர் சாந்தன் நேற்றைய தினம் காலமானார்



(மல்லாவி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டகால எழுச்சிப் பாடகராக திகழ்ந்த எஸ்.ஜே.சாந்தன தனது 57ஆவது வயதில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

23ஆம் பக்கம் பார்க்க...

## எதிர்பாராத வகையில் ஆட்சி மாற்றம் ஏற்படும்

### மகிந்த ஜனாதிபதியாவார் என்கிறார் பந்துல



(கொழும்பு)

எதிர்பாராத வகையில் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படும் என கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு

23ஆம் பக்கம் பார்க்க...

# பாடசாலை கொட்டகை தீயில் எரிந்து நாசம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் கொட்டகை ஒன்று எரிந்து சாம்பலாகியுள்ளது.

கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 4.30 மணியளவில் நிகழ்ந்த தீ விபத்தில் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கிடுகினால் வேயப்பட்ட தற்காலிகக் கொட்டகை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

பிரதேச மக்கள், பொலிஸார் மற்றும் பிரதேச சபையினரின் உதவியுடன் நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் தீப்பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை மின்னிணைப்புக்களற்ற வகுப்பறைத் தொகுதியில் எப்படி தீப்பரம்பல் ஏற்பட்டது என கிளிநொச்சி பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் பாடசாலை சமூகத்தினிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் கிளிநொச்சிப் பகுதியில் தீயணைக்கும் கருவிக்கான ஏற்பாடுகள் இல்லாமையால் இங்கு தீ விபத்தினால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க முடியவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (செ-15-309-312)

# நில மீட்புக்காய் கண்டனப் பேரணி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் காணி மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் மன்னார் - முள்ளிக்குளம் கிராம மக்களின் காணி அபகரிப்புக்கும் எதிராகவும் மன்னார் மாவட்ட மக்கள் நடத்தும் கண்டனப் பேரணி மற்றும் போராட்டம் முருங்கன் பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை நடைபெறவுள்ளது. (செ-281)

# வாகன விபத்து; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.25 மணியளவில் அராலிச் சந்தி இராச வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சாவக்கட்டையைச் சேர்ந்த எ.சுஜீபன் (வயது22), அராலியைச் சேர்ந்த எஸ்.ராஜ்குமார் (வயது19) மற்றும் இவர்களுடன் பயணித்த மற்றுமொரு இளைஞனுமாக மூவரே படுகாயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

# வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக்குங்கள்

## சாந்தி எம்.பியின் ஏற்பாட்டில் நாளை பேரணி

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னி பல்கலைக்கழகமாக தரமுயர்த்த வேண்டும். இதற்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டுமென்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

1992 ஆம் ஆண்டு இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

25 வருடங்கள் கடந்துள்ள நிலையில் நாட்டின் ஏனைய மாகாணங்களின் பல்கலைக்கழக கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் வவுனியா பல்கலைகழக கல்லூரியானது தொடர்ந்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் வவுனியா வளாகமாக இயங்கி வருகின்றது.

காலத்தின் தேவைகருதி வவுனியா வளாகமானது பல்கலைகழகமாக தரமுயர்த்தப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

வன்னி மாவட்டத்திற்கென்று தனியான பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்பதில் அனைவரும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளதுடன் எதிர்கால சந்ததிகள் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று உலகிற்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்புமாக உள்ளது.

எனவே, நாளை 28 ஆம் திகதி காலை 10 மணியளவில் வவுனியா குருமன்காட்டில் இருந்து ஆரம்பமாகும் கோரிக்கை பேரணியில் வன்னியைச் சேர்ந்த கல்விச் சமூகத்தினர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் அமைப்பினர் என்று அனைவரும் அணிதிரண்டு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா எம்.பி அழைப்பு விடுத்துள்ளார். (செ-281)

# சட்டவிரோதமாக சிப்பிகளை கொண்டு சென்றவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை மூதூரிலிருந்து கிண்ணியாவுக்கு சட்டவிரோதமாக சிப்பிகளை கொண்டு சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பாரவூர்தி ஒன்றில் 150 மூடைகளில் சிப்பிகள் கொண்டு சென்றுள்ளார்.

இது தொடர்பில் கிண்ணியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த பாரவூர்தியை சோதனையிட்ட பொலிஸார், சிப்பிகளை கைப்பற்றியுள்ளனர். (இ-7)

# பிரதம நீதியரசர் சிறிபவன் நாளை ஓய்வு பெறுகிறார்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் கே. சிறிபவன் நாளை செவ்வாய்க்கிழமையுடன் ஓய்வு பெறவுள்ள நிலையில், அடுத்த பிரதம நீதியரசராக யார் நியமிக்கப்படவுள்ளார் என்ற தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், அப்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நீக்கப்பட்டு, தமிழரான கே.சிறிபவன் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

65 வயதை எட்டும் நிலையில், பிரதம நீதியரசர், கே.சிறிபவன் நாளை ஓய்வு பெறவுள்ளார். அவருக்கான பிரியாவிடை செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன்றத்தில் நடைபெறும். இந்த நிலையில் அடுத்த பிரதம நீதியரசராக யார் நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது, மூப்பு அடிப்படையில் நீதியரசர் பிரசாந்த டிப் முதலிடத்திலும், நீதியரசர் ஈவா வணசுந்தர இரண்டாவது நிலையிலும் உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே புதிய பிரதம நீதியசரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நில மீட்புக்கான போராட்டத்தை வலுப்படுத்தும் கலந்துரையாடல்

## தமிழ் மக்கள் பேரவை ஏற்பாட்டில் நாளை

(யாழ்ப்பாணம்)

பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்தை வலுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மாலை 4மணிக்கு யாழ்.பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவன கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இக்கலந்துரையாடல்தொடர்பில்தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

ஆக்கிரமிப்புக்கெதிரான குறியீட்டு வடிவமாக மாறியுள்ள கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் ஏறத்தாழ ஒரு மாதத்தை எட்டியுள்ளது.

தமது கொள்கையில் மிகத்தெளிவாகவும் உறுதியாகவும் அந்த அம்மக்கள் சுயஎழுச்சியுடன் முன்னெடுத்துள்ள இந்த நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி மேலும் மக்கள் மயப்படுத்த வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இது குறித்து தமிழர் தாயகப் பகுதிகளில் நாம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மக்கள் அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்றிற்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்த கலந்துரையாடலுக்கு அனைத்து பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொள்கிறது என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# சர்வஜன வாக்கெடுப்பிற்கு த.தே.கூட்டமைப்பு ஆதரவு!

## அமைச்சர் கிரியெல்ல கருத்து

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு இல்லாது புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்படாது என்ற நிலைப்பாட்டிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

உப குழுக்களின் மூலமாக சகல பிரிவுகளும் ஆராயப்பட்டு வருகின்றது. அதேபோல் மக்கள் கருத்தறியும் நடவடிக்கைகள் பாராளுமன்றதிற்கு வெளியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசியல் அமைப்பை உருவாக்கிய பின்னர் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தவும் நாம் தயாராகியுள்ளோம்.

அத்தோடு மக்களின் விருப்பம் இல்லாது நாம் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தயாராக இல்லை. மக்களின் விருப்பத்திற்கு அமையவே எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும். மக்களின் விருப்பம் இல்லாது எதை செய்தாலும் அது மக்கள் விரோத செயற்பாடாகவே அமையும்.

குறிப்பாக தமிழ் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (செ-11)


## காணி விற்பனை

A9 வீதி, நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில் 300 மீற்றர் தூரத்தில் 6 பரப்பு காணியும், நுணாவில் ராசா கடை முன் வீதியில் 3பரப்பில் புதிய வீடும் விற்பனைக்கு உண்டு.

077 873 0129

(8051)

# "நடைபெறுவது நல்லாட்சியா? நரியாட்சியா?"

# கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக மல்லாகத்தில் நேற்று மக்கள் போராட்டம்












(படங்கள்: சோபிகா)

(யாழ்ப்பாணம்)

**இங்கு நடைபெறுவது நல்லாட்சியா? நரியாட்சியா? எனக் கேள்வி எழுப்பி கேப்பாப்பிலவு மக்களின் மண்மீட்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆதரவு தெரிவித்து மல்லாகம் வாழ் மக்களால் நேற்றைய தினம் காலை மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

கேப்பாப்பிலவு- பிலவுக் குடியிருப்பு மக்களின் நில விடுவிப்பு போராட்டம் தொடர்கின்றது. மக்களின் நியாயமான இப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென பலரும் தமது ஆதரவினை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் குறித்த கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் வலிவடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் மல்லாகம் மத்திய முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றையதினம் காலை பழம் பிள்ளையார் கோவிலில், நில மீட்புக்காக இடம்பெற்ற விசேட வழிபாட்டினை தொடர்ந்து கோவில் முன்றலில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் "இங்கு நடைபெறுவது நல்லாட்சியா நரியாட்சியா?, எமது வாழ்வாதாரங்களை சுரண்டாதே, எமது நிலம் எமக்கு வேண்டும்" என கோசங்களை எழுப்பியபடி சுலோகங்களை தாங்கியிருந்தனர்.

வட மாகாண சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மல்லாகம் வாழ் மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மண் மீட்பு போராட்டத்துக்கு ஆதரவினை தெரிவித்தனர். (இ-9)

# நேர்மைக்குப் பரிசு துப்பாக்கி ரவையா? நீதி கோரிப் போராட்டம் தொடர்கிறது





(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட பணிப்பாளரும், யாழ்ப்பாண மாவட்ட பதில் பணிப்பாளருமான நேசகுமார் விமல்ராஜ் மீதான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை கண்டித்து அவரது சொந்தக் கிராமமான கிரான்குளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கிராம மக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன், கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மாகாண சபை உறுப்பினர் ஞா. கிருஷ்ணப்பிள்ளை ஆகியோர் உட்பட சமூகநல விரும்பிகளும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கெடுத்தனர்.

"ஜனாதிபதி அவர்களே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் கண்டு கொள்ளப்படாமல் போகுமா ? நல்லாட்சி அரசு கொலைஞர்களைக் கண்டு பிடித்து நீதியின் முன்னிறுத்த வேண்டும், நேர்மைக்குப் பரிசு துப்பாக்கி ரவையா?" போன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைளைத் தாங்கியவாறு கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (இ)

# மட்டு. பட்டதாரிகளின் போராட்டம் 6 ஆவது நாளாகவும் தொடர்ந்தது

ஆறாவது நாளாகவும் மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவுக்கு அருகாமையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினைத் தொடர்ந்த வேலையற்ற பட்டதாரிகளை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.


கடந்த ஐந்து வருடங்களாக இதுவரையில் வேலை பெறாமல் இருக்கின்ற ஆயிரக்கணக்கான மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

உண்மையிலே இந்தப் போராட்டம் மிகவும் நியாயமானது.

ஏனென்றால் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் பல வருடங்களை கழித்து பட்டம் பெற்றுவிட்டு இதுவரையில் அவர்கள் அரச தொழிலை பெற்றுக்கொள்ளாமல் இருப்பது ஏதுர்பாக்கிய நிலைமையாகும்.

அவர்களுடைய நிலைமைகளைப் பார்க்கும் பொழுது நானும் கவலையடைகின்றேன். ஆகவே இந்த பிரச்சினைகள் தொடர்பாக நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும், விசேடமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடி இவர்கள் தொடர்பான விடயத்தை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்து இந்த நிலைமையை விளங்கப்படுத்தி முடியுமான வரையில் இவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிப்பேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# 9 ஆயிரம் ஓட்டங்கள் குவித்து டி வில்லியர்ஸ் சாதனை



அதிவேகத்தில் 9 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்தவர் என்ற புதிய சாதனையை டி வில்லியர்ஸ் படைத்தார். அவர் 13 ஆண்டு கால கங்குலியின் சாதனையை முறியடித்தார்.

நியூசிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணித் தலைவர் டி வில்லியர்ஸ் 85 ஓட்டங்கள் எடுத்தார்.

அவர் 5 ஓட்டங்களை எடுத்த போது 9 ஆயிரம் ஓட்டங்களை தொட்டார். 33 வயதான டி வில்லியர்ஸ் 214 போட்டியில் 205 இன்னிங்சில் விளையாடி 9080 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் அதிவேகத்தில் 9 ஆயிரம் ஓட்டங்களை எடுத்தவர் என்ற புதிய சாதனையை டி வில்லியர்ஸ் படைத்தார். அவர் 13 ஆண்டு கால கங்குலியின் சாதனையை முறியடித்தார்.

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி 2004 ஆம் ஆண்டு மெல்பேர்ன் மைதானத்தில் 236 ஒருநாள் போட்டியில் 228 இன்னிங்சில் 9 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். இது தான் அதிவேக 9 ஆயிரம் ஓட்டங்களாக இருந்தது. இதை டி வில்லியர்ஸ் நேற்று முறியடித்தார்.

9 ஆயிரம் ஓட்டங்களை தொட்ட 18-வது சர்வதேச வீரர், 2-வது தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையை டி வில்லியர்ஸ் பெற்றார்.

டி வில்லியர்ஸ் ஏற்கெனவே குறைந்த பந்தில் அரைசதம், சதம் மற்றும் 150 ஓட்டங்களை குவித்து உலகசாதனையை படைத்து இருந்தார். 50 ஓட்டங்களை 16 பந்திலும், சதத்தை 31 பந்திலும், 150 ஓட்டங்களை 64 பந்திலும் கடந்து சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சிறந்த ஆடுகளத்தில் ஓகீபேயின் பந்து வீச்சை பார்க்க விரும்புகிறேன் : ஹர்பஜன் சொல்கிறார்

முதல் பந்தில் இருந்தே பந்து திரும்பும் ஆடுகளத்தை விட டெஸ்ட் போட்டிக்கான சிறந்த ஆடுகளத்தில் ஓகீபே எப்படி பந்து வீசுகிறார் என்பதை பார்க்க விரும்புகிறேன் என ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் புனேயில் நடைபெற்றது. மூன்று நாட்களுக்குள் முடிவடைந்த இந்த டெஸ்டில் இந்தியா 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. அவுஸ்திரேலியா அணியின் ஓகீபே 12 விக்கெட்டுக்கள் வீழ்த்தி இந்திய அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

முதல் ஓவரில் இருந்தே பந்து திரும்பும் வகையில் ஆடுகளம் தயார் செய்யப்பட்டிருந்தது. இதற்கு முன்னாள் வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக ஹர்பஜன் சிங் குற்றம்சாட்டியுள்ளார். மேலும் டெஸ்ட் போட்டிக்கான உண்மையான ஆடுகளத்தில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஓகீபே எப்படி பந்து வீசுகிறார் என்பதை பார்க்க விரும்புகிறேன் என்று கூறியுள்ளார்.



இதுகுறித்து அவர் கூறுகையில் நேர்மையாக சொல்ல வேண்டுமென்றால் இது ஒரு ஆடுகளம் கிடையாது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கடைசி நாளான ஐந்தாவது நாள் வரை செல்ல வேண்டும். எந்தவொரு பந்து வீச்சாளரும் இதில் பந்து வீசி விக்கெட்டுக்களை வீழ்த்தும் வகையில் உள்ளான இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்களால் விளையாட முடியாது.

நான் 100 டெஸ்டிற்கு மேல் விளையாடியுள்ளேன். ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்த நான் எவ்வளவு விடாமுயற்சி எடுத்திருப்பேன் என்பது எனக்குத் தெரியும். இதுபோன்ற ஆடுகளத்தை தயார் செய்யும்போது, எதிரணிக்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இதுதான் புனேயில் நடைபெற்றுள்ளது.

நான் சிறந்த டெஸ்ட் ஆடுகளம் எது என்று சொல்கிறேன் என்றால், முதல் நாளில் பந்து புனே டெஸ்ட் போல் திரும்பக் கூடாது. சிறந்த ஆடுகளத்தில் ஓகீபே எப்படி பந்து வீசப்போகிறார் என்பதை பார்க்க விரும்புகிறேன். இதுபோன்ற ஆடுகளத்தில் அல்ல. அதற்குப் பிறகு என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.

புனே போன்ற ஆடுகளத்தில் பிளைட்டாக அல்லது வித்தியாசமாக பந்து வீச வேண்டிய தேவையில்லை. பந்தை சற்று வேகமாக வீசி துடுப்பாட்டவீரர்களை விளையாட முடியாமல் மட்டும் செய்தால் போதுமானது. 6 பந்துகளை ஒரே இடத்தில் வீசினால் அனைத்து பந்துகளிலும் விக்கெட் வீழ்த்தலாம்.

புனே டெஸ்டிற்குப் பிறகு எனது கணிப்பு தவறாகிவிட்டது. இதனால் சமூக வலைத்தளங்களில் என்னை கிண்டல்செய்து வருகிறார்கள் என்றார்.

டெஸ்ட் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்திய அணி அவுஸ்திரேலியாவை 4 டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்று அவுஸ்திரேலியாவுக்கு வெள்ளையடிப்பு செய்யும் என ஹர்பஜன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய அணியினரின் போராட்ட குறைபாடு ஏமாற்றம் அளிக்கிறது

**—சுனில் கவாஸ்கர்**



புனேயில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்தியா 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

441 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிச் சென்ற இந்தியா வெறும் 107 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. 50 ஓவர் கூட தாக்குப்பிடிக்க முடியவில்லை. சுமார் இரண்டரை நாட்கள் மீதமிருந்த நிலையில் அரை நாளில் சரணடைந்தது. இந்த தோல்வி குறித்து முன்னாள் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கூறுகையில்,

"இந்திய அணியின் போராட்ட குறைபாடு எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.


அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சை இந்தியா எதிர்கொண்ட ஆட்டம் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது.

இந்திய அணியின் மோசமான தோல்விகளில் இதுவும் ஒன்று என்றார்.

# சர்வதேச டெஸ்ட் தரவரிசை ஆஸியின் ஸ்மித் முதலிடம்

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி தலைவர் ஸ்மித் 900 புள்ளிகளை கடந்து சாதனை படைத்துள்ளார்.

புனேயில் நடைபெற்ற முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் முதல் இன்னிங்சில் 27 ஓட்டங்களும், 2-வது இன்னிங்சில் 109 ஓட்டங்களும் குவித்தார். இதனால் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இதுவரை பெறாத 939 புள்ளிகள் பெற்று அதி உச்சத்தில் உள்ளார். இதற்கு முன் டொன் பிராட்மென் (961), லென் ஹட்டன் (945), ஜேக் ஹோப்ஸ் மற்றும் ரிக்கி பொண்டிங் (942), பீட்டர் மே (941), கேரி சோபர்ஸ், விவியன் ரிச்சர்ட்ஸ் மற்றும் குமார் சங்கக்கார (938) ஆகியோர் 900 புள்ளிகளை கடந்து சாதனைப் படைத்துள்ளனர்.



விராட் ஹோலி 873 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் ஜோ ரூட் 848 புள்ளிகளுடன் 3-வது இடத்தையும், நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் 823 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சுக்கான தரவரிசையில் அஸ்வின் 878 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறார். ஜடேஜா மற்றும் ஹசில்வுட் ஆகியோர் 860 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளனர்.

புனே டெஸ்டில் முதல் இன்னிங்சில் 64 ஓட்டங்களும், 2-வது இன்னிங்சில் 10 ஓட்டங்களும் சேர்த்த லோகேஷ் ராகுல் 46-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

12 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஓகீபே 33 இடங்கள் முன்னேறி 29-வது இடத்தைப் பிடித்துள்ளார். (க)

# முடிந்தது முடிந்து போகட்டும் அடுத்த போட்டியில் அடியைப் பாருங்கள்

## தோல்வி குறித்து விராட் கருத்து



இரண்டு இன்னிங்சிலும் எங்களது துடுப்பாட்டம் சொதப்பி விட்டது. எங்களது திறமைக்கு ஏற்ப விளையாடவில்லை.

இது போன்ற ஆடுகளங்களில் எப்படி விளையாடக்கூடாது என்பதற்கு எங்களது ஆட்டத்தை உதாரணமாக சொல்லலாம்.

சில மாதங்களாக நாங்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த நிலையில், இந்த டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் நான்கைந்து வீரர்கள் ஒரே மாதிரியாக தவறாக கணித்து ஆட்டம் இழந்தது அரிதாக நடக்கக் கூடிய ஒன்றே.

கடந்த 2 ஆண்டுகளில் எங்களது மோசமான துடுப்பாட்டம் இது தான்.

குறிப்பிட்ட வீரர்களுக்கு எதிராக மட்டும் 5 பிடிகளை நழுவ விட்டோம் என்றால், பிறகு வெற்றிக்கு நாம் தகுதியான அணியாகவே இருக்க முடியாது.

பந்து வீச்சாளர்களை குறை சொல்ல மாட்டேன். தோல்விக்கு துடுப்பாட்டமே முழுக்காரணம்.

இது போன்று மிகப் பெரிய முன்னிலையை கொடுத்து விட்டு சரிவில் இருந்து மீள்வது உண்மையிலேயே கடினமானது.

என்ன தவறு செய்தோம் என்பதை பார்க்க வேண்டும்.

ஆடுகளத் தன்மையை எங்களை விட அவுஸ்திரேலியா நன்றாக பயன்படுத்திக்கொண்டது.

போட்டி முழுவதும் எங்களை நெருக்கடிக்குள்ளாக்கிய அவுஸ்திரேலியா வெற்றிக்கு தகுதியான அணி.

இந்த தோல்வியில் இருந்து பாடம் கற்று, முன்னேற்றம் கண்டு, அடுத்த போட்டியில் வலுவான அணியாக மீண்டு வர வேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்த டெஸ்டில் முதல் பந்தில் இருந்தே அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுப்போம் என்று உறுதி அளிக்கிறேன்.

# சர்வதேச நாடுகளின் சூழ்ச்சிகள் மூலமே விடுதலைப் போராட்டம் நிர்மூலமாகியது

## சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு

சமாதான உடன்படிக்கை மூலம் ஓர் சமாதானச் சூழல் நிலவும் என்று எண்ணிய எங்களுக்கு சர்வதேச சூழ்ச்சியுடன் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியுடன் போர் திணிக்கப்புட்டு தமிழீழ விடுதலைப் போராட்டமும் நிர் மூலமாக்கப்பட்டது என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். சிவனேசனின் 8ஆம் ஆண்டு நினைவு தினம் கரவெட்டியில் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டுஅமைதிஉடன்படிக்கை ஏற்பட்டு 15 வருடங்கள் நிறைவடைந்துள் ளன. ஆனால் சமாதான உடன்படிக்கை மூலம் ஓர் சமாதானம் நிலவும் என்று எண்ணிய எங்களுக்கு சர்வதேச நாடுகளின் சூழ்ச்சியுடன் 20 இற்கும் மேற்பட்ட சர்வேதச நாடுகள் சேர்ந்து எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிர் மூலமாக்கி அழிப்பதில் சிங்கள தேசம் வெற்றி பெற்றது. போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளின் புலனாய்வு அமைப்பு பல தடவைகள் எங்களை எச்சரித்திருந்தது உங்களுக்கு உயிராபத்து என்று. அவ்வாறு சிவனேசனுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்த போதே ஆழ ஊடுருவும் படை யால் அவர்கொல்லப்பட்டார். போரில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை இலங்கை அரசு படுகொலை செய்தது. 50 ஆயிரத்திற்கு அதிகமான வீர மறவர்கள் மாவீரர்களாகியிருக்கிறார்கள். இவை இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நடந்தன. இந்தப் படுகொலைகளுக்கே நாம் சர்வதேசத்திடம் நீதி கோருகின்றோம். இதற்கு நீதி கிடைக்க வேண்டும். இலட்சக் கணக்கான மக்களின் படுகொலைக்கான விசாரணையையே நாங்கள் கோரி நிற்கின்றோம். இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒரு போர்க் குற்றவாளி தான் என்ற கருத்தை இங்கு பதிவிடுகின்றேன். ஏனெனில் போர் உச்சக்கட்டம் அடைந்திருந்த போது கடைசி வாரத் தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட போது பதில் பாதுகாப்பு அமைச்ச ராக இருந்தவர் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே.

ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒரு போர்க் குற்றவாளிதான். நல்லாட்சியிலே எங்களுக்கு நல்லது நடக்கும் என்றார்கள். இராணுவ மயமாக்கல் நீக்கப்படும். எல்லாம் நல்லது நடக்கும் என்றார்கள். எது நடந்தது? இலங்கைக்குள்ளே அரசியல் தீர்வு நடக்காத ஒன்று என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழர்கள் தங்கள் தலை விதியை தாங்களே தீர்மானிக்கிற நிலை வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-60)


### கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
### ஏல விற்பனை

எமது கல்வி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 06.03.2017 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.

1. பயன்படுத்தப்பட்ட கணனிகள்
2. பிறின்டர்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள்
3. இலத்திரனியல் உபகரணங்கள்
4. உடைந்த தளபாடங்கள்
5. ஏனைய சிறு அலுவலக உபகரணங்கள்

இ.இரவீந்திரன்
செயலாளர்

(சி-7646)



Cardiff Metropolitan University
SRI LANKA'S MOST ACCEPTED BRITISH
MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
in Jaffna
March, 2017 Intake
(Third Batch in Jaffna)

» Duration: 18 Months

» Entry Qualification

- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Part Time (Sundays only) class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from the Total Payment.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafetaria/ Library Computer laboratory/ Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)21 4 777 888
Fax: (+94)21 4 777 890
Email: jaffna@icbtcampus.edu.lk

EGAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

(சி-7674)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ம.மகாதேவன்

திதி:பிரதமை

அன்னை மடியில் 23. 08. 1951
ஆண்டவன் அடியில் 09.03.2016

அப்பா! உம்மை பிரிந்து ஆண்டொன்று
சென்றாலும் ஆறவில்லை எம்துயர்
கண் இமைக்கும் நொடியினிலே
கண்ணெதிரே நடந்ததெல்லாம்
கனவாகி விடாதா! தினந்தினம் ஏங்குகின்றோம்
காலங்கள் சென்றாலும் அப்பா
உங்கள் நினைவுகள் மனதை விட்டு அகலாது..
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
மஞ்சவனப்பதி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

இராமப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனைவி, மகள்

(8039)

# இராசி பலன்

27.02.2017
(மாசி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
பிரதமை முன்னிரவு 8.19 மணிவரை
சதயம் முற்பகல் 7.48 மணிவரை
சுபநேரம் 12.29-1.59 மணிவரை
இராகுகாலம் 7.59-9.29 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | |
| சூரி.புத சந்,கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் இரவு 12.57 மணிக்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்** தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.

**மேடம்** எடுத்த காரியங்கள் அனைதிலும் வெற்றிகாண வேண்டிய நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**இடபம்** தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், அரச வழியில் ஆதரவு பெருகும்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் அனுகூலமுண்டு, சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், சுப செலவுகள் கூடும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம். காட்டுவீர்கள்.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு.

**மகரம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** கனவு பலிதமுண்டு, தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்தாசைகளால் உற்சாகம் அடைவீர்கள், பாகப் பிரிவினைகள் சமுகமாக முடியும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும் வகையில் அமையும், பயணங்களால் பயனுண்டு, வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** கூட்டு முயற்சியில் வெற்றி கூடும், உடல்நலன் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், செய்தொழில் விருத்தியுண்டு, கௌரவமான நாள்.

# "சொந்த மண்ணில் எங்களை வாழ விடுங்கள்"

# காணிகளை விடுவிக்கக்கோரி

# உரும்பிராயில் நேற்று கவனயீர்ப்பு




(படங்கள்:- கோபி)





முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பில் விமானப்படை முகாம் முன்பாக கடந்த மாதம் 31ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை 27ஆவது நாளாக தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக உரும்பிராய் சென்.மைக்கல் பங்கு திருச்சபை மக்கள் ஒன்றிணைந்து காலை 7 மணிமுதல் 9 மணி வரை பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதன் தலைமையில் பலாலி வீதி உரும்பிராய் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் "அரசே பூர்வீக நிலத்தில் குடியேறி எம்மை வாழ விடு. இராணுவமே எமது நிலங்களை விட்டு வெளியேறு. இந்த மண் எங்களின் சொந்த மண், இந்த மண்ணில் எங்களை வாழ விடுங்கள். எங்கள் கோரிக்கைக்கு முடிவே வராதா" போன்ற சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியும் கேப்பாப்பிலவு இராணுவம் கையப்படுத்தியுள்ள காணிகளை விடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தனர். (இ-87)

## பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2014/2016 கல்வி ஆண்டில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களின் பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத் தில் கலாசாலை அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் 640 ஆசிரிய மாணவர்கள் சான்றிதழ்களைப் பெறவுள்ள நிலையில் இடவசதியைக் கருத்திற்கு இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

முதலாவது அமர்வு ஆரம்பக் கல்வி மற்றும் ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஆகும்.

இவ் அமர்வு காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக இசுருபாய, பத்தரமுல்ல கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவின் பிரதம ஆணையாளர் கே.எம்.எச். பண்டார கலந்து கொள்ளவுள்ளார். இரண்டாவது அமர்வு ஏனைய 12 பாடநெறிகளுக்கானதாகும் இவ் அமர்வு பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சான்றிதழ்களைப் பெறவிருக்கும் சித்தியடைந்த அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களது தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடர்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக சான்றிதழ்களைப் பெற வரும் ஆசிரிய மாணவர்கள் தங்களது வரவினை முன் கூட்டியே தத்தமது வகுப்பு ஆசிரிய மாணவ தலைவர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)





## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் திருமதி. சுபாஜனி மதியழகன் தலைமையில் இடம் பெறவுள்ள இக்கூட்டத்தில் பேரவையின் அங்கத்தவர்கள், கலைஞர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




## யாழ்.கோம்பயன்மணல் மயானப் பகுதியில்



யாழ். திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் தனியார் வைத்தியசாலையில் சி.ரி.ஸ்கானிங் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாணத்தில் முதன்முறையாக நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் சி.ரி.ஸ்கானிங் சேவைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. விருந்தினர்கள் இணைந்து ஸ்கானிங் இயந்திரத்தை இயக்குவதையும் தொடுதிரையில் செயற்பாட்டைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி உட்பட நால்வருக்கு விளக்கமறியல்

கடந்த 21ஆம் திகதி மாலை, மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பிள்ளையாரடியில் வைத்து ரி56 ரக துப்பாக்கியொன்றுடன், கைது செய்யப்பட்ட புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியொருவர் உட்பட அவரது தகவலின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேலும் மூவருக்கும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த சந்தேக நபர்கள் நால்வரும் நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 6 ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு. உத்தரவிடப்பட்டது. மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும், மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மட்டக்களப்பு ஊறணி பிரதேசத்தில் வைத்து கடந்த 21.02.2017 அன்று இரவு 9 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து மட்டக்களப்பிற்கு வந்த பேருந்தை நிறுத்தி சோதனை நடத்தியபோது துப்பாக்கியுடன் இருந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் ரி- 56 ரக துப்பாக்கியும் 46 ரவைகளும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இருவர் எனவும் அவர்கள் முல் லைத்தீவு தேவிபுரம் பிரதேச த்தைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றையவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனவும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ-3)


40 வருடங்களுக்கு மேலாக மக்களின்
நன்மதிப்பை வென்ற
“றோயல் குளுக்கோஸ்”
PACKED BY: ROYAL INDUSTRIES,
Colombo-13 TP:- 077 727 7670
தற்போது
புதிய
வடிவில்!!




இழந்த சக்தியை உடனடியாக
மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
“றோயல் குளுக்கோஸ்”
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 021 222 2567



மணிவிழா வாழ்த்துக்களும்
பணிநயப்பு விழாவும்

“வாழ்வும் வாக்கும் செம்மையுறச் சேரும் கல்வி பணியாற்றி
ஓய்வு காணும் மாசற்ற எழுத்தறிவிக்கும் ஆசான்”

உயர்திருவாளர்
யோசப் மாசிலாமணி
(முதல்வர் மு/முள்ளிவாய்க்கால் மேற்கு
க.உ.வித்தியாலயம்)

அவர்களது பணிநயப்பு
விழாவும் மணிவிழாவும்

காலம் : 2017.02.27
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

எமது பாடசாலையில் சேவையாற்றி
மணிவிழாக்காணும் எமது பாடசாலை
அதிபர் திரு.யோசப் மாசிலாமணி அவர்களின்
சேவையைப் பாராட்டுவதுடன் அவர் உடல்
உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.





பிரதிஅதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர், மாணவர்கள்
மு/முள்ளிவாய்க்கால் மேற்கு
க.உ.வித்தியாலயம்,
முள்ளிவாய்க்கால்.
(சி-7672)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா:56
தகைமை/தொழில்B.COM/அரசதொழில்
தொ.இ: B/7000

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 5
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:CBF, DFF/
வங்கியாளர்
தொ.இ: B/3034

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:பூசம்
கி.பா: 36சூரிசெவ் 9 இல்
உயரம்: 5’4"தகைமை/
தொழில்:HNDA/அரசதொழில்
தொ.இ: B/4471

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 39செவ் 2 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:MBBS/
வைத்தியர்
தொ.இ: B/3163

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 61சூரிசெவ் 1 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/4407

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 23செவ் 12 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:CBF, DBF/
வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4441

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 37செவ் 7 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:ICT/அரசதொழில்
தொ.இ: G/4466

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 67செவ் 1 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4476

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# வவுனியாவில் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது உறவுகளின் உணவுத்தவிர்ப்பு



வவுனியாவில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

குறித்த போராட்டமானது வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியின் ஓரமாக கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவு வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவுகள் எதுவும் எட்டப்படாத காரணத்தினால் சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்பு தொடர் போராட்டம் ஒன்றை காணாமல் போனோரின் உறவுகள் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை பொது அமைப்புக்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவை தாங்கள் வேண்டி நிற்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போது பாதுகாப்பு அமைச்சர் வழங்கிய உறுதி மொழியின் பிரகாரம் கடந்த 9 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

எனவே எங்களது கோரிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து முடிவு தெரிவிக்கும் வரையில் போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-250-15)




## மூன்று மாத கால அவகாசத்தை மறுத்து

# விக்ஸ்காட்டு மக்களின் கவனயீர்ப்பு ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது



(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இராஜேந்திரன்குளம் விக்ஸ்காட்டு மக்கள் தங்களது குடியிருப்பு நிலங்களை பெற்றுத்தருமாறு கோரி நேற்று ஞாயிற்றுக் கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தாம் வாழும் காணிகளை தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரியே வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஐந்தாவது நாளாகவும் இம் மக்களுக்கு தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இத் தொடர் போராட்டத்தில் சிறுவர்கள், முதியவர்கள் உட்பட குடும்பங்களின் உறுப்பினர் அனைவரும் இணைந்து இரவு பகலாக வெயிலிலும், பனியிலும் பாதிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் இணைந்து இம் மக்களுக்கு மாற்றுக் காணியாக அதே பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் இனங்காணப்பட்ட பகுதியில் 47 குடும்பங்களுக்கும் காணி பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தனர்.

இதற்கான அனுமதியை மூன்றுமாத காலஅவகாசத்தின் பின்னர் அக்காணியை வன இலாகா திணைக்களத் திடமிடமிருந்து பெற்றுத் தருவதாகவும், அதுவரையில் குறித்த ஒதுக்கப்பட்ட பகுதியில் குடியிருக்குமாறும், வன இலாகா அதிகாரிகளால் எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதற்கு மக்கள் தாங்கள் வாழும் காணிகளையே தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரி தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு சிங்கள, முஸ்லிம் மக்கள் ஆதரவளிப்பு

## காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியும் பங்கேற்பு



வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த வந்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் போராட்டத்தில்கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இதன் போது காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி உட்பட முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் இப் போராட்டத்தில் இணைந்து தமது ஆதரவையும்தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளை வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாக வருகை தந்து தமது ஆதரவை இவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, தென் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் குழுவொன்று கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் காணி விடுவிப்பு கோரி போராடும் மக்களுக்கு தமது ஆதரவையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக

# மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் குதித்து நேற்றுக் கவனயீர்ப்பு



கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்க வேண்டுமெனக்கோரி நேற்றுடன் 27 ஆவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை விமானப் படை முகாம் முன்பாக வீதி ஓரத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

வீதியோரத்தில் வெயில், கொட்டும் பனிகளையெல்லாம் தாண்டி சொந்த மண்ணில் கால்பதிக்க வேண்டும் என்ற பேராசையுடன் தொடர்கின்றது இவர்களின் அறவழிப் போராட்டம்.

இந்த நிலையில் இந்த மக்களின் போராட்டமானது வெற்றிபெற வேண்டும்.மக்களுடைய காணி மக்களிடம் ஒப்படைக்கவேண்டுமென அவர்களுடைய போராட்டத்துக்கு ஆதரவாக அம்மக்கள் போராட்டம் மேற்கொண்டு வரும் இடத்தில் ஒன்று கூடிய மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இம் மாணவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தம்முடன் ஏந்தியிருந்தனர்.

இம்மாணவர்கள் "தாங்கக்கோவிலா கேட்டோம் சொந்த பூமியை தானே கேட்டோம்" "இந்த மண் எங்களின் சொந்த மண்" "எம் காணி எம் உரிமை. எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும்" "எங்களை எங்கள் காணிகளில் சுதந்திரமாக வாழவிடுங்கள்" "எமது கோரிக்கைக்கு செவிசாய்க்குமா நல்லாட்சி அரசு" "சொர்க்கமே என்றாலும் சொந்த பூமிபோல் சுதந்திரம் வருமா" போன்ற பல்வேறு வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்திலீடுபட்டனர். (2-281)

# சொந்த நிலம் கோரி

## பன்னிரெண்டாவது நாளாகவும் தொடர்கிறது

## புதுக்குடியிருப்பில் சுழற்சி முறை போராட்டம்





(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பொதுமக்கள் முன்னெடுத்து வரும் காணி விடுவிப்பு போராட்டம் நேற்று 24 ஆவது நாளை எட்டியுள்ள அதேவேளை சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று 12 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

(2-281)

## 'அரசே! காட்டுக்காணிகளில் மக்களை குடியமர்த்து'

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு

## செல்வாநகர் கிராம மக்கள் முன்னெடுப்பு



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள செல்வாநகர் கிராம மக்கள் தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை செல்வாநகர் கிராம அலுவலர் காரியாலயத்திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்ட போரின் போது பல்வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு மீள் குடியேற்றத்தின் பின்னர் வாழ்வாதார உதவித் திட்டங்கள், சுகாதார வசதிகள், வீட்டுத்திட்டம், குடியிருக்கும் காணிகள், கிராம உள்ளக வீதிகள் உட்பட பிரதான வீதிகள் புனரமைப்புப் பணிகள், குடிநீர் வசதி உட்பட பலதரப்பட்ட அடிப்படை வசதிகளை மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 7 வருடங்கள் கடந்த நிலையிலும் ஏற்படுத்தித் தரப்படவில்லை எனத் தெரிவித்தே சிறுவர்கள், முதியவர்கள் உள்ளடங்கலாக பலரும் கலந்து கொண்டு இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.


இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது "நல்லாட்சி அரசே! காட்டுக் காணிக ளில் மக்களை குடியமர்த்து"

"நாமும் குடிநீரை பெற ஏற்பாடு செய்யுங்கள்"

"அரசே வீதிகளை புனரமைத்து தாருங்கள்"

போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-15)




# முகப்பு வெளிச்சக் கருவிகளை பொருத்திய பின்னரே துவிச்சக்கரவண்டிகளை எடுங்கள்

## மல்லாவி பொலிஸ் பொறுப்பதிகாரி உரிமையாளர்களுக்கு உத்தரவு

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் மல்லாவி பொலிஸார் விசேட வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட போது துவிச்சக்கரவண்டிகளில் முகப்பு வெளிச்சமின்றி வீதியில் பயணித்தவர்களை தடுத்து நிறுத்தி விபத்து ஏற்படுவது தொடர்பில் விளக்கமளித்ததுடன் அவர்களது துவிச்சக்கர வண்டிகளை மல்லாவி பொலிஸ் நிலையம் கொண்டு சென்று வைத்துள்ளனர்.

இச் செயற்பாடு நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு 25 துவிச்சக்கரவண்டிகள் முகப்பு வெளிச்சம் இன்றி பயணித்த நிலையிலேயே பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிகளுக்கான முகப்பு வெளிச்ச கருவிகளை கொண்டு வந்து பொருத்திய பின்னர் துவிச்சக்கர வண்டிகளை எடுத்துச் செல்லுமாறு மல்லாவி பொலிஸ் பொறுப்பதிகாரி உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர். (2-15)

# பூந்தோட்டம் முகாமில் தங்கியுள்ள மக்களை தென்பகுதியினர் சந்தித்தனர்

## பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்வு



மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் வவுனியா பூந்தோட்டம் முகாமில் தங்கியுள்ள மக்களை தென் பகுதியில் இருந்து வருகை தந்த இளைஞர், யுவதிகள் நேற்று முன்தினம் பார்வையிட்டதுடன் அவர்களது பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்து கேட்டறிந்து கொண்டனர்.

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் தெற்கின் மாத்தறை, மொனராகலை ஆகிய பகுதிகளில் இருந்து வருகை தந்த சிங்கள மற்றும் தமிழ் இளைஞர், யுவதிகள் 20 பேர் கொண்ட குழு ஒன்று வவுனியா பூந்தோட்டம் முகாமில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் தங்கியுள்ள 110 குடும்பங்களையும் பார்வையிட்டதுடன் அவர்களது பிரச்சினைகள், குறைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

இதன்போது அம் மக்களின் அடிப்படை வசதிகளின் நிலை, மாணவர்களின் கல்வி நிலை, வாழக் கூடிய சூழல் தொடர்பில் ஆராய்ந்த இளைஞர், யுவதிகள் அம் மக்களின் நிலைமையைப் பார்த்து தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

குறித்த முகாமைப் பார்வையிட்ட பின்னர் கருத்து தெரிவித்த அவ் இளைஞர், யுவதிகள், பூந்தோட்டம் முகாமில் தற்காலிகக் கொட்டகைக்குள் தங்கியுள்ள மக்களைச் சந்தித்தோம். அவர்கள் கடந்த 20 வருடத்திற்கு மேலாக இதில் தங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கான ஒழுங்கான வீடு, மலசல கூடம், மின்சாரம், குடிநீர் என எந்த விதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்கின்றனர்.

இங்குள்ள மாணவர்கள் கூட கல்வியைத் தொடர முடியாத நிலையில் பாடசாலை கல்வியை இடை விலகிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறான துன்பங்களுடன் யுத்தம் முடிவடைந்து 8 வருடங்களின் பின்னரும் மக்கள் வாழ்வது தொடர்பில் உண்மையில் எம்மைப் போன்ற தென்பகுதிகளில் வாழும் பலருக்கும் உண்மை தெரியாது. உண்மையில் இங்குள்ள மக்களின் நிலைமை மற்றும் வடக்கின் உண்மை நிலை தொடர்பில் நிச்சயமாக தெற்கில் தெரியப்படுத்தி மக்கள் மத்தியிலுள்ள சில தவறான எண்ணங்களை நீக்க நாம் முயற்சிப்போம்.

இங்குள்ள மாணவர்கள் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கல்வியைத் தொடர முடிந்த உதவிகளையும் பெற்றுக் கொடுக்க முயல்வோம் எனத் தெரிவித்தனர். (2-250-15)

### முருங்கன் பேருந்து தரிப்பிடத்தில் இன்று கண்டனப் பேரணி

கேப்பாப்பிலவு காணி மீட்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கிராம மக்களின் காணி அபகரிப்புக்கும் எதிராக மன்னார் மாவட்ட மக்கள் நடத்தும்கண்டனப்பேரணி முருங்கன் பேருந்து நிலையத்தின் முன் இடம் பெறவுள்ளது.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் உள்ள முருங்கன் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை குறித்த கண்டனப் பேரணி இடம் பெறவுள்ளது.

குறித்த கண்டனப்பேரணியில் இன உணர்வும் மனிதாபிமானமும் உள்ள அனைத்து மக்களும் கலந்து கொண்டு எம்மக்களின் மண் மீட்புப் போரட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

குறித்த போராட்டம் தொடர்பில் "மன்னார் மாவட்ட மக்கள்" என்ற பெயரில் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-15)

# ஓலைத்தொடுவாயில் 180 மில். செலவில் கடல் அட்டை குஞ்சுகள் உற்பத்தி நிலையம்





இலங்கையின் முதலாவது கடலட்டை குஞ்சு உற்பத்தி நிலையம் மன்னார் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட ஓலைத்தொடுவாய் கிராமத்தில் ஒரு ஏக்கர் விஸ்தீரணமான பகுதியில், மத்திய கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் 180 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள குறித்த உற்பத்தி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

குறித்த கடல் அட்டை குஞ்சுகள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு நிலயத்திற்கான அடிக்கல்லை மத்திய கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உப்பாலி மொகட்டி ஆகியோர் இணைந்து நாட்டியதோடு ஞாபகார்த்த கல்லையும் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர். அதனைத்தொடர்ந்து நிகழ்விற்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன்,காதர் மஸ்தான் ஆகியோரும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இந்த திட்டத்தின் மூலமாக ஆண்டுக்கான எதிர்பார்க்கப்படும் வருமானமாக 750 மில்லியன் பெறமுடியும் என்று இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். (2-281)

# ஆட்சியைப் பிடிக்க சசி குடும்பம் நடத்திய சதிகள்

# அதிர்ச்சி கிளப்பும் சட்டத்தரணி ஜோதி

"அக்கா கோட்டைக்குக் கிளம்பி விட்டீர்களா... மதியம் சாப்பிட என்ன வேண்டும்" என ஜெயலலிதாவிடம் கேட்ட சசிகலா. கோட்டையிலேயே உட்கார நினைத்தார். அதற்காக நடந்தவை அக்மார்க் அக்கப்போர்கள். உச்ச நீதிமன்ற தீர்ப்பால் அந்தக் கனவு தவிடுபொடியாகிவிட்டது. "அதிகாரத்தில் அமர வேண்டும் என்கிற சசிகலா குடும்பத்தின் சதித்திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது" என்கிறார் ஜெயலலிதாவின் முன்னாள் சட்டத்தரணி என்.ஜோதி.



சதித்திட்டம்:-01

"1991இல் ஜெயலலிதா ஆட்சியில் அமர்ந்தபோதுதான், அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அவர் பங்குதாரராக உள்ள நிறுவனம் வாங்கியது. 'அரசுக்குச் சொந்தமான நிலத்தை முதல்வரே வாங்கினால் அது அவருக்குச் சிக்கலை ஏற்படுத்தும்' என்பது நடராசனுக்குத் தெரியும். டான்சி நிலத்தை வாங்கியதில் நடராசனின் சதித்திட்டமும் புதைந்து கிடந்தது. முதல்வர் பதவியைக் கைப்பற்ற நடந்த முதல் சதி இது. 'டான்சியால் ஜெயலலிதாவின் பதவிக்கு ஆபத்து வரும். நாற்காலியில் அமரலாம்' எனக் கணக்குப் போட்டார் நடராசன். டான்சி தொடர்பான கேரளவாகள் எல்லாம் சுப்பிரமணியன் சுவாமியின் கைக்கு எப்படி போயின என்பது தெரியவில்லை. ஆனாலும், நடராசனின் கனவு பலிக்கவில்லை. காலப்போக்கில் நடராசனுக்கும் ஜெயலலிதாவுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அதே சுப்பிரமணியன் சுவாமிதான் இப்போது 'சசிகலா முதல்வர் ஆக வேண்டும்' என ஆளுநர் வித்யா சாகர் ராவைப் போய் பார்க்கிறார். 'பதவிப் பிரமாணம் செய்துவைக்கவில்லை என்றால் வழக்குப் போடுவேன்' என்கிறார்.

இளவரசி



நடராசன்



சுதாகரன்



சதித்திட்டம்:-02

அடுத்து, 2ஆவது சதித் திட்டம். சுதாகரனை வளர்ப்பு மகனாக்கி 'ஜெயலலிதாவின் வாரிசு' என்ற நிலையை ஏற்படுத்தி அரசியலைக் கைப்பற்ற நினைத்தார்கள். சட்டப்படி அந்த தத்து எடுப்பு செல்லாது எனத் தெரிந்தும், ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனாக சுதாகரனை ஆக்கினார்கள். உலகமே வியக்கும் அளவுக்கு அவருக்குத் திருமணத்தையும் நடத்தினார்கள். பட்டு உடைகளைப் படாடோபமாக அணிந்து வலம் வந்தார் சுதாகரன். அதே பாணியில்தான் ஜெயலலிதாவைப் போல மேக்அப் போட்டு வெளியே வருகிறார் சசிகலா. அப்பலோவில் ஜெயலலிதா இருந்தபோது வாய் திறக்காத சசிகலாதான், முதல்வர் பதவிக்காகப் பத்திரிகையாளர்களிடம் பேட்டி அளிக்கிறார். வளர்ப்பு மகன் மீதே கஞ்சா வழக்கு போட்டார் ஜெயலலிதா. சித்தியும் வளர்ப்புத் தாயும் சிறையில் இருந்தபோது, தான் முதல்வர் ஆக வேண்டும் என்பதற்காக 'சின்ன எம்.ஜி.ஆர் சுதாகரன் மன்றம்' வைத்து யாகங்கள் எல்லாம் நடத்தினார். ஆனால், அவரால் தலையெடுக்க முடியவில்லை.



சதித்திட்டம்:-03

அடுத்து டி.டி.வி.தினகரன் மூலம் மூன்றாவது சதியைத் தீட்டினார்கள். தினகரனை அரசியலுக்குக் கொண்டுவந்து கட்சியின் பொருளாளர் ஆக்கினார்கள். 1999 நாடாளுமன்றத் தேர்தலில் பெரியகுளம் எம்.பி.ஆக்கப்பட்டார் தினகரன். 2004 எம்.பி. தேர்தலில் தோல்வி அடைந்தார். இருந்தாலும் ராஜ்ய சபா எம்.பியாக நியமித்தார்கள். சொத்துக் குவிப்பு வழக்கு கர்நாடகாவில் நடந்து கொண்டிருந்த போது, 'லண்டனில் ஹோட்டல் ஒன்றை தினகரன் வாங்கினார்' எனப் புது வழக்கு ஒன்றைத் தனியாகப் போட்டார்கள். 'சொத்துக் குவிப்பு வழக்கினுடைய புலன் விசாரணையின் தொடர்ச்சிதான் இது. தனியாக ஹோட்டல் வழக்கு போடக் கூடாது.

இரண்டு வழக்குகளையும் ஒன்றாகதான் நடத்த வேண்டும்' என ஜெயலலிதா மற்றும் சசிகலா ஒப்புதலுடன் நீதிமன்றத்தில் மனு போட்டேன். இதில் சட்ட சூட்சுமம் உண்டு. இப்படி இரண்டு வழக்குகளையும் சேர்த்தாலோ, வழக்கில் புதிதாக ஒன்றை இணைத்தாலோ மீண்டும் ஆரம்பத்தில் இருந்து வழக்கை விசாரிக்க வேண்டும். பரமபதம் தாயம் ஒன்றில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். சொத்துக் குவிப்பு வழக்கில் 272 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருந்தனர். வழக்கை ஒன்றாகச் சேர்த்தால் மீண்டும் அந்த சாட்சிகளை விசாரிக்க நேரிடும். லண்டன் வழக்கில் இருக்கிற சாட்சிகள் எல்லாம் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு சீக்கிரம் இந்தியா வந்து சாட்சி சொல்லமாட்டார்கள். அதனால், இந்த மனுவை தாக்கல் செய்தேன். இதை தினகரன் விரும்பவில்லை. தன் மீதான வழக்கை சொத்துக் குவிப்பு வழக்கில் சொருகிவிட்டால், தனக்கு எதிர்காலத்தில் சிக்கல் வரும் என நினைத்தார் தினகரன். அதனால், என் மீது தினகரனுக்குத் தீராத கோபம். ஜெயலலிதாவுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்காக இந்த ஏற்பாட்டை செய்தேன். இது தினகரனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா ஜெயிலுக்குப் போனதற்கே தினகரன்தான் காரணம். லண்டன் ஹோட்டல் வழக்கை இணைத்தால் என்னை கொலை செய்துவிடுவதாக தினகரன் மிரட்டினார். அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அதன்பிறகு ஜெயலலிதாவிடம் இருந்து நான் விலகிவிட்டேன். பிறகு, தினகரனை பொருளாளர் பதவியில் இருந்து ஜெயலலிதா நீக்கினார். அதன்பிறகு போயஸ் கார்டன் பக்கமே தினகரன் தலைவைத்துப் படுக்க முடியவில்லை. அந்த தினகரன், ஜெயலலிதா இறந்தபிறகுதான் போயஸ் கார்டனில் நுழைந்தார். ஆட்சி அமைக்க உரிமை கோர ஆளுநரை சசிகலா சந்தித்தபோது உடன் சென்றவர் தினகரன்.

ஜெயலலிதாவால் விரட்டியடிக்கப்பட்ட தினகரனைத்தான் சசிகலா ஆளுநரைப் பார்க்க அழைத்துப் போகிறார். பொதுவாழ்க்கைக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்? இப்போது தினகரனை மீண்டும் கட்சியில் சேர்த்து, அதே நாளில் துணைப் பொதுச் செயலாளராகவும் ஆக்கி விட்டார்கள். ஜெயலலிதாவுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் எனச் செயற்பட்ட தினகரனுடன் சசிகலா கைகோர்த்துக் கொள்வது பதவி வெறியால்தான்! ஆளுநரை சந்திக்கும்போது மூத்த அமைச்சர்கள் ஓரத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். சசிகலாவும் தினகரனும்தான் ஆளுநரிடம் பேசுகிறார்கள். அரசியல் சகாக்களை சசிகலா அழைத்து செல்லவில்லை. அக்கா மகனைத்தான் அழைத்துப் போனார். 'குடும்ப ஆட்சிதான் நடத்துவோம்' என்கிறார் நடராசன். அதை அப்பட்டமாகவே செய்கிறார்கள். இப்படித்தான் அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் நடக்கும். பல வழக்குகளில் ஜெயிலுக்குப் போனவர் சசிகலா. இப்போது சொத்துக் குவிப்பு வழக்கில், சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார். தினகரன் மீது தொடரப்பட்ட அந்நியச் செலாவணி மோசடி வழக்கில் 28 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. சுதாகரன் மீது கஞ்சா வழக்கு போடப்பட்டது. லெக்சஸ் கார் வழக்கில் நடராசனும் பாஸ்கரனும் ஜாமீனில் இருக்கிறார்கள். சொத்துக் குவிப்பு வழக்கில் இளவரசி தண்டன்னை விதிக்கப்பட்டிருக்கிறார். திருமணத்துக்கு முன்பே பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிபதி ஆகியிருக்கிறார் இளவரசியின் மகன் விவேக்.

இப்படிப்பட்டவர்கள் பின்னணியில் ஆட்சி நடந்தால் அது ஆட்சியாகவா இருக்கும். மக்களாட்சியின் மாண்பு என்னாவது? முதல்வர் பதவியின் வருவாய் மட்டுமே இவர்கள் கண்ணில் தெரிகிறது. அந்தப் பதவியின் கடமைகள் தெரியாதா? ஜெயலலிதா இருக்கும் வரையில் அவரை வைத்து ஆதாயம் பார்த்தவர்கள். இப்போது அவரைப் புதைத்துவிட்டு அதன் மீது ஆட்சியையும் கைப்பற்றத் துடிக்கிறார் கள். அமைச்சராக இருந்தாலும்கூட சசிகலாவைப் பார்த்துவிட முடியாது.

ஆனால், சசிகலாவே எம்.எல்.ஏ-க்களைப் பார்க்க கூவத்தூர் நோக்கி வருகிறார் என்றால், பதவிக்காக எவ்வளவு உயரத்தில் இருந்தும் இவர்கள் இறங்கி வருவார்கள்" என்பதை உணர முடிகிறது என்றார் ஜோதி.

ஜூனியர் விகடன்

# பெருவில் கோர விபத்து ; 19 பேர் உயிரிழப்பு !



பெரு நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள ட்ரூஜிலோ நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை லொறியொன்று சிறியரக பேருந்து ஒன்றுடன் மோதியதால் ஏற்றபட்ட தீ விபத்தில் சிக்கி, 19 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சிலர் படுகாயங்களுடன் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பொருட்களை ஏற்றிவந்த லொறி வேகமாகச் சென்று கொண்டிருந்ததாகவும், திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, முன்பாக சென்று கொண்டிருந்த பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் மீது பயங்கரமாக மோதியுள்ளது.

வாகனங்கள் மோதிக் கொண்டதில் ஏற்பட்ட தீ விபத்திலேயே குறித்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் தீயை அணைத்து படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (இ-7)


# அரசை பீதிக்கு உள்ளாக்கும் சதித்திட்டம் இடம்பெறுகிறது

## பாலித ரங்கே பண்டார எச்சரிக்கை

எதிர்ப்புக்களை ஏற்படுத்தி அரசாங்கத்தை பீதிக்கு உள்ளாக்கும் சதித்திட்டம் இடம்பெற்று வருவதாக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தோல்வியடைந்த அணிகள் மக்களை தந்திரமான முறையில் தூண்டி அரசாங்கத்திற்கு எதிரான இந்த சீர்குலைப்பு திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் மஹாகும்பக் கடவல கொட்டுக்கச்சிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.



அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் இந்த எதிர்ப்பைக் கட்டுப்படுத்த ராஜபக்ஷ நிகழ்ச்சி நிரலை பயன்படுத்தப் போவதில்லை.

அத்துடன் எதிர்ப்புக்களை பார்த்துக்கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிரலை தற்போதைய அரசாங்கம் கையாளப்போவதில்லை.

கடந்த காலத்தில் ரத்துபஸ்வல, கட்டுநாயக்க, சிலாபம் பகுதிகளில் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதை மறக்க முடியாது.

இதனால், சந்தர்ப்பவாத அரசியல் அணிகளின் சூழ்ச்சிகளின் பின்னால் சென்று நடவடிக்கை எடுக்க நேரமில்லை.

நேரத்துடன் அந்த எதிர்ப்புக்களையும் சதித்திட்டங்களையும் அடக்கும் விதத்தை எதிர்காலத்தில் காணமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-70)

# நல்லாட்சியை எவராலும் சீர்குலைக்க முடியாது

# வீரவன்சவின் தேவைக்காக நாடாளுமன்று இழப்பீடு செலுத்த முடியாது-அமுனுகம

நாடாளுமன்றத்தில் உரையாற்ற அதிக நேரத்தை பெற்றுக்கொள்வதற்காகவே விமல் வீரவன்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்துள்ளதாகவும் அவரது தேவைக்காக நாடாளுமன்றம் இழப்பீடு செலுத்த முடியாது எனவும் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டி பேராதனை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் தனித்த அணியாக சுயாதீனமாக செயற்பட கோரிக்கை விடுத்திருந்தது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை.



இதேபோலவே விமல் வீரவன்சவும் தனது கட்சியை சுயாதீனமாக மாற்றும் தோல்வியான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

ஜனநாயக நாடு ஒன்றில் சுயேட்சையான அணியாக பதிவு செய்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்திற்கு செல்ல முடியும். எனினும் மக்களின் வாக்குகளில் பிரதான கட்சி ஒன்றின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி சுயாதீனமாக மாறும் முயற்சி வெற்றியளிக்காது.

நாடாளுமன்றத்தில் உரையாற்ற அதிக நேரத்தை பெற்றுக்கொள்ளவே வீரவன்ச சுயாதீனமாக இயங்க சந்தர்ப்பத்தை கோருகிறார்.

நாடாளுமன்றத்தில் அதிகமான நேரம் உரையாற்ற வேண்டுமாயின் தினேஷ் குணவர்தன மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோருடன் பேசி நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும்.


கூட்டு எதிர்க்கட்சி தற்போது துண்டுகளாக சிதறி வருகிறது. 2021 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறாது என்பதால் கட்சியின் உறுப்பினர்களை தக்கவைக்க அவர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கருணா அம்மான் வடக்கில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று மகிந்த ராஜபக்ஷவை வலுப்படுத்த போவதாக கூறினாலும் தற்போதைய அரசாங்கத்தின் பயணத்தை எவராலும் சீர்குலைக்க முடியாது.

ஜனநாயக நாடு ஒன்றில் எவரும் கட்சிகளை தொடங்கலாம், தேர்தலில் போட்டியிடலாம், கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

ஆனால், எந்த கட்சிக்கோ அல்லது தனி நபருக்கோ அரசாங்கத்தின் பயணத்தை நிறுத்த முடியாது என அமைச்சர் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்கப்பூரில் திடீர் தீ விபத்து



சிங்கப்பூரில் திடக்கழிவு மேலாண்மை ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தால், பரபரப்பு ஏற்பட்டது. தெற்காசிய நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரில், கழிவுகளை சேமித்து வைக்கும் ஆலையில், நேற்று முன்தினம் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக பரவியதால் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இதுகுறித்து, தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த வீரர்கள், சில மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். பல வகைப்பட்ட கழிவுப் பொருட்கள் தீயில் கருகின. இதனால், அப்பகுதியில், பெரும் புகைமூட்டம் காணப்பட்டது. இந்த தீ விபத்து, பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)



செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (றூட்) 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் நேற்றைய தினம் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்றது. செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் கே.பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொண்டார். குறித்த நிகழ்வில் நிறுவனத்தின் 35ஆம் ஆண்டு நிறைவையொட்டி கேக் வெட்டி நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டதுடன் தொடர்ந்து விருந்தினர்கள் உரையும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்துடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (படங்கள்:-சோபிகா)



# சசிகலா பதவி தப்புமா? சட்ட நிபுணர்களுடன் தினகரன் ஆலோசனை

# கட்சியைக் கைப்பற்ற ஓ.பி.எஸ்.அணி தீவிரம்

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலா தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று அறிவிக்கக் கோரி தேர்தல் ஆணையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு மீது நாளை 28ஆம் திகதிக்குள் அவர் பதில் அளிக்க வேண்டும். இதில் அவரது பதவி தப்புமா? என்று அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். எனினும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பதவிக்கு யாரும் தேர்வு செய்யப்படாமல் இருந்தது. பின்னர், மாவட்ட வாரியாக நிர்வாகிகளும், அமைச்சர்கள் தனியாகவும், எம்.எல்.ஏக்கள் தனியாகவும் போயஸ்கார்டனில் சசிகலாவைச் சந்தித்து அவர்தான் பொதுச் செயலாளராக வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அதைத் தொடர்ந்து, சென்னையில் அ.தி.மு.க. பொதுக்குழுவைக் கூட்டி, கட்சியின் தற்காலிக பொதுச் செயலாளராக சசிகலாவை நியமித்து தீர்மானம் நிறைவேற்றினர். அந்த தீர்மானக் கடிதம் சசிகலாவிடம் வழங்கப்பட்டது. அதை ஏற்று அவர் பொதுச் செயலாளராக பதவி ஏற்றார்.

இந்தநிலையில்தான் கட்சியின் பொருளாளராக இருந்த ஓ.பன்னீர்செல்வத்துக்கும், சசிகலாவுக்கும் இடையே மோதல் எழுந்தது. இருவரும் தனித்தனி அணியாக பிரிந்தனர். ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு கட்சியின் அவைத் தலைவர் மதுசூதனன், அமைப்புச்செயலாளர்கள் செம்மலை, பொன்னையன் மற்றும் 9 எம்.எல்.ஏக்கள் 12 எம்பிக்கள், ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, ஓ.பன்னீர்செல்வம், அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பாண்டியராஜன், மதுசூதனன் உள்ளிட்ட 20 பேரை கட்சியில் இருந்து நீக்குவதாக சசிகலா அறிவித்தார். ஆனால், "சசிகலாவுக்கு யாரையும் நீக்க அதிகாரம் இல்லை. தற்போது கட்சியில் பொதுச் செயலாளர் இல்லை என்பதால், நான் தான் கட்சிக்குப் பொறுப்பாளர். சசிகலா உள்ளிட்ட 20 பேரை நீக்குகிறேன்" என்று சொல்லி மதுசூதனன் பதிலுக்கு அறிக்கை வெளியிட்டார்.


இந்த பரபரப்புக்கிடையே, அ.தி.மு.க. கட்சியின் சட்ட திட்டப்படி தற்காலிக பொதுச் செயலாளராக சசிகலா தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று கூறி தேர்தல் ஆணையத்தில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் மனு கொடுத்தனர். அந்த மனுவில், "கட்சியில் அடிப்படை உறுப்பினராக 5 ஆண்டுகள் இருப்பவரே பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட முடியும். சசிகலாவை கட்சியில் இருந்து நீக்கி மீண்டும் சேர்க்கப்பட்டு இன்னும் 5 ஆண்டுகள் முடியவில்லை. மேலும், அ.தி.மு.கவின் சட்ட விதிகளின்படி கட்சியின் பொதுச் செயலாளரை அடிப்படை உறுப்பினர்கள்தான் வாக்களித்து தேர்வு செய்ய வேண்டும். ஆனால் தொண்டர்கள் வாக்களித்து சசிகலா தேர்வு செய்யப்படவில்லை. அவரை பொதுக்குழுதான் தற்காலிக பொதுச் செயலாளராக நியமித்தது. இதனால் அவரது நியமனம் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டது. இந்த மனு மீது உரிய பதில் அளிக்கும்படி தற்போது பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் இருக்கும் சசிகலாவுக்கு தேர்தல் ஆணையம் கடந்த 17ஆம் திகதி நோட்டீஸ் அனுப்பியது.

அந்த நோட்டீசில் நாளை 28ஆம் திகதிக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று கூறியிருந்தது. இந்த நோட்டீஸ் சிறையில் இருக்கும் சசிகலாவிடம் வழங்கப்பட்டது. சசிகலா சிறையில் அடைக்கப்பட்ட பிறகு அவரது அக்கா மகன் டி.டி.வி.தினகரன் மட்டுமே அவரை சந்தித்துப் பேசியுள்ளார். இதனால், அவரே தற்போது தேர்தல் ஆணையத்திற்கு பதிலளிப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாக, சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருகிறார். அவர் மூலம் தேர்தல் ஆணைய நோட்டீசுக்கு பதில் அளிப்பதற்கான பணிகளில் அ.தி.மு.க. சட்டத்தரணிகள் ஈடுபட்டுள்ளனர். இன்று திங்கட்கிழமைதான் பார்வையாளர்கள் நேரம் என்பதால் அப்போது அவரிடம் தேர்தல் ஆணையத்துக்கான பதிலில் கையெழுத்தைப் பெற்று அன்று மாலையோ அல்லது நாளை செவ்வாய்க்கிழமையன்றோ தேர்தல் ஆணையத்தில் கொடுக்க அ.தி.மு.க. சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர். மேலும் தேர்தல் ஆணையத்தில் பதிலளிக்க இனி இரண்டு நாட்கள்தான் உள்ளன.

அவர்கள் கொடுக்கும் பதிலைப் பெற்று தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் நம்பிக்கையோடு உள்ளனர். சசிகலா பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று அறிவிக்கப்பட்டால், அவரால் கட்சியில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள டி.டி.வி. தினகரன் உட்பட பலரது கட்சி நியமனம் செல்லாது. அதே போல அவரால் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதும் செல்லாது. அப்படி என்றால் கட்சியின் அவைத் தலைவராக மதுசூதனன் நீடிப்பார். அவர்தான் கட்சியின் பொதுச் செயலாளர் தேர்தலை நடத்துவார். இந்த தேர்தலில் சட்ட விதிகளின்படி சசிகலா போட்டியிடவே முடியாது.

இதனால் மீண்டும் அ.தி.மு.கவில் பெரிய அளவில் மோதல்கள் வெடிக்கலாம். இதனால் தேர்தல் ஆணையம் என்ன முடிவு எடுக்கும் என்ற பரபரப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் இப்போதே எழத் தொடங்கியுள்ளது. இதுபற்றி, ஓ.பி.எஸ். அணி மூத்த தலைவர் ஒருவர் கூறுகையில், "சமீபத்தில் சமாஜ்வாடி கட்சி உடைந்த போது, தேர்தல் ஆணையம் வேகமாக விசாரித்து முடிவு அறிவித்தது. அப்போது அகிலேஷ் பக்கமே அந்த கட்சியின் பெரும்பான்மையினர் இடம்பெற்றிருந்ததால், அவரது தலைமையிலான பிரிவையே தேர்தல் ஆணையம் அங்கீகரித்தது. அதே போல், தற்போது அ.தி.மு.க. தொண்டர்களின் பெரும்பான்மையினர் எங்களிடம் உள்ளதால், எங்கள் அணியே உண்மையான அ.தி.மு.க.வாக அங்கீகரிக்கப்படும்" என்றார். (இ-12)

# தீபா தனி இயக்கம் தொடங்கியது ஏன்?



ஓ.பன்னீர்செல்வம் அணியில் சேராமல் தீபா தனி இயக்கம் தொடங்கியது ஏன் என்பது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா புதிய அரசியல் இயக்கத்தை தொடங்கியுள்ளார்.

'எம்.ஜி.ஆர் -அம்மா- தீபா பேரவை' என்று பெயரிடப்பட்டுள்ள இயக்கத்துக்கு கொடியையும் அறிமுகப்படுத்தியுள்ளார். கறுப்பு, சிவப்பு நிறக்கொடியின் நடுவில் எம்.ஜி.ஆருக்கு ஜெயலலிதா செங்கோல் கொடுக்கும் படம் இடம்பெற்றுள்ளது. தீபா தனது அரசியல் பயணத்தை எம்.ஜி.ஆர். பிறந்த நாளான ஜனவரி 17ஆம் திகதியே தொடங்கி விட்டார். கட்சி பற்றிய அறிவிப்பை ஜெயலலிதா பிறந்த நாளான பெப்ரவரி 24ஆம் திகதி அறிவிப்பதாகக் கூறியிருந்தார்.

இதனால்கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தீபா வீட்டில் தினமும் தொண்டர்கள் திரண்டனர். அவர்களிடம் தீபா கருத்துக்களைக் கேட்டு வந்தார். தொண்டர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து சொல்வதற்காக அவரது வீட்டு முன்பு பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது. அதில் தொண்டர்கள் எழுதிப் போடும் கருத்துக்களை தீபா படித்து பார்த்து ஆலோசனைகளை தெரிந்து கொண்டார்.

இந்த நிலையில் அ.தி.மு.கவில் சசிகலாவுக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம் போர்க்கொடி உயர்த்தினார். அத்துடன் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களை திரட்டி தனி அணியாக செயற்பட்டார். கட்சியையும் ஆட்சியையும் மீட்பேன் என்று உறுதி எடுத்தார்.

இதனால் பெரும்பாலான ஆதரவாளர்கள் ஓ.பன்னீர்செல்வம் வீட்டில் குவியத் தொடங்கினார்கள். அவருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகத் தொடங்கியது. அப்போது ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியில் "தீபா தங்கள் அணியில் சேரலாம் என்று அழைப்பு விடுத்தார். இதனால் தீபா ஓ.பன்னீர்செல்வம் அணியில் சேரலாம் என்று பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஓ.பன்னீர்செல்வம், தீபா ஆதரவாளர்கள் தாங்கள் வைத்த பனர்களில் அவர்கள் இருவரின் படத்தையும் அச்சிட்டனர். இந்த அணிக்கு அடிமட்ட தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு கிடைத்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் ஜெயலலிதா நினைவிடத்தில் ஓ.பன்னீர்செல்வமும், தீபாவும் சந்தித்து பேசினார்கள். அப்போது பேட்டியளித்த தீபா நானும் ஓ.பன்னீர்செல்வமும் இணைந்து செயற்படுவோம் என்றார். அதன்பிறகு தீபாவை ஓ.பன்னீர்செல்வம் தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவருக்கு ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி ஆரத்தி எடுத்து வரவேற்றார். இதனால் இருதரப்பு ஆதரவாளர்களும் மிகுந்த உற்சாகத்தில் இருந்தனர்.

இதற்கிடையே ஜெயலலிதா பிறந்த நாளில் ஆர்.கே. நகர் தொகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஓ.பன்னீர்செல்வமும், தீபாவும் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. தங்கள்ளை கலந்து ஆலோசிக்காமலேயே இது போன்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதாக தீபா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆர்.கே. நகர் தொகுதியான தண்டையார்பேட்டையில் நடந்த ஜெயலலிதா பிறந்த நாள் விழாவில் ஓ.பன்னீர் செல்வம் கலந்து கொண்டார். ஆனால் தீபா பங்கேற்கவில்லை.

அதற்குமாறாக தீபா தனது வீட்டில் புதிய இயக்கத்தை தொடங்கினார். ஓ.பன்னீர்செல்வத்துடன் இணைந்து பணியாற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தீபா தனி இயக்கம் தொடங்கியது பரபரப்பை ஏற்படுத்தியது.

தீபா தனி இயக்கம் தொடங்கியது ஏன் என்று பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. வெளிமாவட்டங்களில் இருந்து வரும் நிர்வாகிகளிடம் தீபாவும் அவரது கணவர் மாதவனும் கருத்துக் கேட்டு வந்தனர். அப்போது ஓ.பன்னீர்செல்வம் அணியில் அவர்தான் முன்னிலைப்படுத்தப்படுவார். அவருடன் சேரும் போது தீபாவின் தனித்துவம் போய் விடும் என்று நிர்வாகிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கிராமங்களில் தீபாவைத்தான் ஜெயலலிதாவின் வாரிசாக பொதுமக்கள் நினைக்கிறார்கள். எனவே, தீபா வெளிமாவட்டங்களுக்கு ஒரு முறை சுற்றுப்பயணம் செய்தால் அவருக்கு ஆதரவு பெருகிவிடும். அ.தி.மு.க. தொண்டர்களும் கட்சியும் முழுமையாக தீபாவின் கைக்கு வந்து விடும் என்று தீபாவின் கணவர் மாதவனிடம் நிர்வாகிகள் எடுத்துரைத்துள்ளனர்.

மேலும் தண்டையார்பேட்டை பொதுக்கூட்டத்தில் தீபா கலந்து கொள்வார் என்று தங்களை கேட்காமலேயே ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் அறிவித்து விட்டனர். இதுபோன்ற எந்த விடயங்களையும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் தங்களுடன் கலந்து பேசுவதில்லை என்ற மனக்குறையும் தீபா தரப்பினர் மத்தியில் இருந்து வருகிறது.

மேலும் தீபாவை ஆதரிப்பவர்கள் யாருமே முன்னணி நிர்வாகிகள் இல்லை. ஒன்றிய, மாவட்ட, நகரம் அளவிலான நிர்வாகிகள் தான். தீபா தனியாக நின்றால் நமக்கு மாநில அளவில் பதவியில் முக்கியத்துவம் கிடைக்கும் என்று இந்த நிர்வாகிகள் கருதுகிறார்கள். ஓ.பன்னீர்செல்வத்துடன் தீபா இணைந்தால் நமக்கு முக்கிய பதவிகளுக்கு முன்னணி நிர்வாகிகள் வந்து விடுவார்கள். எனவே நமக்கு மாநில அளவில் நல்ல பதவி கிடைக்காது என்று ஒன்றிய, மாவட்ட, நகர நிர்வாகிகள் நினைக்கிறார்கள். எனவே அவர்கள் ஓ.பன்னீர்செல்வத்துடன் இணைய வேண்டாம். தனி அணியாக செயற்படுவோம் என்று கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு தீபாவும் கணவர் மாதவனும் ஆலோசனை நடத்தினார்கள். அதன் பிறகே ஓ.பன்னீர்செல்வத்துடன் சேர வேண்டாம் தனி இயக்கம் தொடங்கலாம் என்று தீபா முடிவு செய்து புதிய இயக்கத்தை தொடங்கியுள்ளார்.

அத்துடன் ஆர்.கே.நகரில் போட்டியிடுவேன். இரட்டை இலை சின்னத்தை மீட்பேன் என்றும் தீபா அறிவித்துள்ளார்.

தற்போது அ.தி.மு.க.வில் சசிகலா பொதுச்செயலாளராக இருந்து வருகிறார். ஆனால் அவர் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது. அ.தி.மு.க. தொண்டர்கள் வாக்குச் செலுத்தி பொதுச்செயலாளரை தேர்ந்தெடுப்பார்கள் என்று ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். இதனால் அ.தி.மு.க. இரு பிளவாக உள்ளது. இந்த நிலையில் அ.தி.மு.க. தொண்டர்கள் என் பக்கம் இருப்பதால் இரட்டை இலை சின்னத்தை மீட்பேன் என்று தீபா அறிவித்திருப்பது புதிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.


அ.தி.மு.க. கட்சிக்குத்தான் இரட்டை இலை சின்னம் சொந்தம். அ.தி.மு.க.வில் இணையாமல் தனி அமைப்பை தொடங்கியுள்ள தீபா எப்படி இரட்டை இலை சின்னத்தைப் பெற முடியும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தீபாவுக்கு இருக்கும் இப்போதைய வாய்ப்பு ஓ.பன்னீர்செல்வம் அணியில் இணைவது ஒன்றுதான். இப்போதைக்கு ஓ.பன்னீர்செல்வம் முன்னிலைப்படுத்தப்பட்டாலும் வரும் காலங்களில் தீபா அரசியலை நன்கு தெரிந்து கொள்வதுடன் தலைமை பதவிக்கும் எளிதாக வரமுடியும். அதன் மூலம் அவர் அரசியலில் சாதிக்க முடியும். ஆனால் இப்போதைக்கு அ.தி.மு.க. தொண்டர்கள் 3 பிரிவாக நிற்கும் நிலையில் இது எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாக அமைந்து விடும் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகவுள்ளது. (இ-12)

# ட்ரம்பிற்கு எதிராக ஹொலிவுட் உலகம்
## போராட்டத்தில் குதித்தது

(வோஷிங்டன்)

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஹொலிவுட் பட உலகினர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் குடியேற்ற கொள்கைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.




உலகமே பரபரப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட உள்ள நிலையில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று விருந்து விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இருப்பினும் நேற்று முன்தினம் அந்த விருந்து விழா இரத்துச் செய்யப்பட்டது. இதே வேளை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஹொலிவுட் பட உலகினர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் குடியேற்ற கொள்கைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் மைக்கேல் பாக்ஸ், ஜோடி போஸ்டர், வில்மர் வால்டெர்ரமா உள்ளிட்ட 500இற்கும் மேற்பட்ட ஹொலிவுட் நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச அகதிகள் குழுவின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான டேவிட் மிலிபேண்ட், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட அகதிகளையும் அமெரிக்காவினுள் நுழைய விடாமல் தடை செய்ததால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விளக்கிப் பேசினார். (இ-12)




# வெள்ளை மாளிகை விருந்தில் கலந்து கொள்ள மாட்டேன்
## ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஏப்ரல் மாதம் நடக்க திட்டமிடப்பட்டுள்ள விருந்து விழாவில் தான் கலந்து கொள்ளவில்லை என டுவிட்டர் மூலம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்த ஆண்டிற்கான வெள்ளை மாளிகையின் நிருபர்கள் ஆணையத்தின் ஆண்டு விழா விருந்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என தெரிவித்துள்ளார். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வழக்கமான பாரம்பரியத்தை ட்ரம்ப் மீறுகிறார்.

இந்த ஆண்டு நடைபெற இருக்கும் வெள்ளை மாளிகை நிருபர்கள் ஆணையத்தின் விருந்து நிகழ்வில் நான் கலந்து கொள்ள மாட்டேன். இவ்வாறு தனது டுவிட் மூலம் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அனைவருக்கும் இனிய மாலை வணக்கத்தை தெரிவித்து விடுங்கள் என அவர் தெரிவித்தார்.



அமெரிக்காவின் எதிரிகளாக ஊடகத்தினர் இருக்கின்றனர் என அவர் முன்னர் தெரிவித்திருந்தார். வெள்ளை மாளிகையில் நடக்கும் இந்த விருந்தில் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் பல்வேறு ஹொலிவுட் பிரபலங்கள் கலந்து கொள்வர். முதல் முறையாக இந்த விருந்து வோஷிங்டன் டிசியில் 1920 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இந்த ஆண்டின் விருந்து ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. முன்னதாக அமெரிக்காவின் முன்னணி செய்தி நிறுவனங்கள் வெள்ளை மாளிகையினுள் செய்தி சேகரிக்க தடை விதித்து ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# சீன சொகுசு ஹோட்டலில் தீ விபத்து பலி எண்ணிக்கை பத்தாக உயர்வு



சீனாவில் ஆடம்பர ஹோட்டலில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 10 பேர் உடல் கருகியும், மூச்சுத்திணறியும் பலியாகினர். 14 பேர் உடல் கருகி காயம் அடைந்தனர். தீவிபத்துக் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சீனாவில் ஜியாங்ஸி மாகாணத்தின் தலைநகர் நான்சாங்கில் 4 மாடி சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளது. இந்த ஹோட்டலின் 2 ஆவது தளத்தில் நேற்று முன்தினம் எதிர்பாராத விதமாக தீப்பிடித்தது.

அந்தத் தளத்தில் தொழிலாளர்கள் அழகுபடுத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நேரிட்டது. இதனால் பெரும் புகை மண்டலம் உருவானது.

உடனடியாக தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் விரைந்து வந்து பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த ஹோட்டல், அதன் அருகேயுள்ள 24 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டதாகும்.

எனவே தீ விபத்தை தொடர்ந்து அந்தக் குடியிருப்பில் வசித்து வந்த 260 பேரும் பத்திரமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

இருப்பினும் இந்த கோர விபத்தில் உடல் கருகியும், மூச்சுத்திணறியும் 3 பேர் பலியான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி மேலும் 7 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 10 உயர்ந்துள்ளது.

மேலும் சுமார் 15 பேர் படுகாயம் அடைந்த நிலையில் அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை உயரக்கூடும். இந்த தீ விபத்து தொடர்பாக 7 பேரை கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-12)

## இரட்டைக் குண்டுத் தாக்குதல்
# 32 பேர் உயிரிழப்பு


மேற்கு சிரியாவில் உள்ள ஹொம்ஸ் நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை துப்பாக்கிதாரிகள் மற்றும் தாக்குதல்தாரிகள் மேற்கொண்ட இரட்டைக் குண்டுத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களுள் இராணுவப் புலனாய்வு பிரிவின் உள்ளூர் தலைவர் ஒருவரும் உள்ளடங்குவதாக இது தொடர்பில் தகவல் வெளியிட்ட ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த தாக்குதலுக்கு ஜப்பாத் ஃபதே அல் - ஷாம் (Jabhat Fateh al-Sham) என அழைக்கப்படும் தீவிரவாத குழு பொறுப்பேற்றுள்ளது. குறித்த குழு முன்னதாக அல் - நுஸ்ரா எனும் பெயரில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலை ஐந்து தீவிரவாதிகள் இணைந்து நடத்தியதாக குறித்த தீவிரவாதக்குழு தெரிவித்துள்ளது.

இராணுவப் பாதுகாப்பின் தலைமையகத்தை குறி வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இது தொடர்பில் வெளியாகியுள்ள அண்மைய தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-12)




# 10 பொலிஸார் சுட்டுக்கொலை

வட ஆப்கானிஸ்தானில் உள்ள ஜாஸ்ஜன் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 10 பொலிஸ் அதிகாரிகளும் மற்றும் தளபதி ஒருவரின் மனைவியும் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மசூதி ஒன்றிலிருந்து வெளியே வந்த அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தனது கணவர் சுடப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டு சம்பவ இடத்துக்கு சென்ற பெண்ணும் சுட்டுக் கொல்லப்பட்டதாக மாகாண ஆளுநரின் பேச்சாளர் முகமது ரீஸா கஃபோரி கருத்து தெரிவித்துள்ளார். கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். (இ-7)

# சிவில் ஆவணங்கள் தொடர்பில் ஒரு பார்வை

சட்ட உதவி ஆணைக் குழுவின் சேவைப்பரப்பில் முக்கியமான விடயமாக கையாளப்படும் பிரச்சினைகளில் சிவில் ஆவணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

கடந்த கால யுத்தம் விட்டுச் சென்ற இடைவெளியில் மக்களுக்கு தங்களுடைய பிறப்பு, இறப்பு மற்றும் திருமணத்தை பதிவு செய்வதில் போதிய அக்கறையின்மை பிரதான விடயமாகும். யுத்தத்திற்கு பிந்திய அரசசேவைகள் ஒவ்வொன்றும் சிவில் ஆவணங்களை மையப்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளதை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்கள் நன்றாகவே உணரத் தொடங்கி உள்ளனர்.

சுவிஸ் தூதுவராலய உதவியுடன் முன்னெடுக்கப்படும் சட்ட உதவி ஆணைக் குழுவின் சேவைகளில் பின்வரும் பிரச்சினைகள் முக்கியமாக அணுகப்படுகின்றன.

பொதுவாக ஒவ்வொரு மனிதனும் தன்னை சட்ட ரீதியாக அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் தமது மத, கலாசார விழுமியங்களையும் செயற்பாடுகளையும் சட்டரீதியான அங்கீகாரம் பெறச் செய்வதற்கும் தமது சொத்துக்கள் மற்றும் உடைமைகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்று கொள்வதற்கும் சட்டரீதியான வெளிப்படுத்தலானது (Registration) மிக முக்கியமானதாகும். இந்த வகையில் ஆவணப்படுத்தலானது மிகமுக்கியத்துவம் பெறுகின்றது.

ஆவணப்படுத்தல் என்பது குறித்த ஒரு நிகழ்வினை / செயற்பாட்டினை எதிர்கால தேவைகருதியும், சட்ட ரீதியான ஒரு வலுவான ஆதாரமாக அதனை பேணுவதற்குமான அக்குறித்த நிகழ்வினை ஒழுங்குபடுத்தி, பொருத்தமான வடிவமைப்பைச் செய்து எழுத்துருவாக்கி அதனைப்பாதுகாக்கும் ஒரு செயன்முறையாகும்.

எமது அன்றாட வாழ்வில் நாம் பல்வேறு நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் எதிர்கொண்டாலும் அவை அனைத்தும் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுவிடமுடியாது. சட்ட வலுப்பெறச் செய்வதற்கு அதனை ஆவணப்படுத்துவதன் மூலம் சட்ட வரையறைக்குள் கொண்டு வரமுடிவதனால் அது சட்ட ரீதியான ஆவணமாக மாற்றமடைகின்றது.

### பிறப்புச்சான்றிதழ்

அன்றாடம் சட்ட உதவி ஆணைக்குழுவினால் கையாளப்படும் பிரச்சினைகளில் பின்வரும் பிரச்சினைகளை குறிப்பிடமுடியும்.

01.பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை உரிய காலத்தில் பதிவு செய்து கொள்ள முடியாமை.

02.பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் எழுத்துப் பிழைகள் காணப்படுதல்.

03. பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் மாற்றங்கள் தொடர்பிலான பிரச்சினைகள்.

04. பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உண்மை பிரதியினை பெற்றுக்கொள்ள முடியாமை.

மேலும் இந்தியா மற்றும் பிற நாடுகளிலிருந்து மீளத் திரும்பும் மக்களுக்கு தங்களுடைய பிள்ளைகளின் இந்தியா மற்றும் பிறநாட்டு பிறப்புச் சான்றிதழை இலங்கை பிறப்புச் சான்றிதழாகவும் மற்றும் அதனை தொடர்ந்து பிரஜா உரிமை பெற்றுக் கொள்வதிலும் உள்ள போதிய அறிவின்மையால் ஏற்படும் பிரச்சினைகளை குறிப்பிடமுடியும்.

இவை தொடர்பில் பிரதேச பதிவாளர் காரியாலயத்திலோ அல்லது சட்ட உதவி ஆணைக்குழுவிலோ போதிய தகவலை பெற்றுக்கொள்ள முடியும். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விசேட செயற்றிட்டத்தின் கீழ் இவை கையாளப்படுகின்றன.

### திருமணச்சான்றிதழ்

பொதுவாக திருமணச் சான்றிதழ் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்வதன் ஊடாகவே தீர்வு காணப்படமுடியும். பின்வரும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

01.திருமணச்சான்றிதழில் ஏற்படும் எழுத்துப்பிழைகள் மற்றும் பெயர்மாற்றங்கள்.

02. பிந்தின திருமணம் ஒன்றைப் பதிவு மேற்கொள்வதற்கான தகவல்கள்.

### இறப்புச்சான்றிதழ்

பல்வேறு காரணங்களினால் ஏற்பட்ட இறப்புக்கள் தொடர்பிலான பதிவு மேற்கொள்வது இன்றியமையாத ஒன்றாக இலங்கையில் காணப்படுகின்றது. பின்வரும் பிரச்சினைகள் தொடர்பில் அதிக விழிப்புணர்வு தேவையான ஒன்றாக உள்ளது.

01. பிந்திய இறப்பினை பதிவு செய்வதில் உள்ள சிக்கல் நிலைமை.

02. எழுத்துப் பிழைகளை திருத்தம் செய்வதில் உள்ள சிக்கல் நிலைமைகள் ஆகியவற்றை கோடிட்டு கூறமுடியும்.

பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியான விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் மக்கள் அது தொடர்பில் போதிய கவனம் எடுக்காமல் இருப்பதன் விளைவுகள் இரண்டாம் தலைமுறையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்மையிலுள்ள பிரதேச செயலகத்தை அல்லது கிராம உத்தியோகத்தரை அல்லது சட்ட உதவி ஆணைக்குழு காரியாலயத்தை அணுகுவதன் மூலம் விரைந்து தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

தொகுப்பு:-ம.ஜெயந்தன்,
சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர்,
சட்ட உதவி ஆணைக்குழு,
முல்லைத்தீவு.

# சத்திரசிகிச்சையடுத்து வைத்தியர் நோயாளியுடன் ஒரு மணிநேரம் செலவிடவும்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



சத்திரசிகிச்சையின் பின்னர், வைத்தியர் நோயாளியுடன் ஒரு மணித்தியாலத்தை செலவிடவேண்டும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எத்தகைய தனியார் வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் தொடர்பான வைத்திய பரிசோதனைகளின் போது வைத்தியர் ஒருவர் நோயாளியை 10 நிமிடங்கள் பரிசோதனை செய்ய வேண்டும். தற்போது இந்த சட்டம்நடைமுறையில்உண்டு. நோயாளரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையே அறவிடப்படவேண்டும். விசேடமாக அரச விசேட வைத்திய நிபுணர்களுக்காக இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் நோயாளர்களின் உரிமை மற்றும் வைத்தியர்களின் சேவை தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, நோயாளர்களின் உரிமைக்காக எதிர்காலத்தில் மேலும் பல சட்டங்களைக் கொண்டுவருவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுமக்கள் நலன் தொடர்பான சர்வதேச கண்காட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் உரையாற்றுகையில் இந்த விடயங்களைக் தெரிவித்தார். (இ)

# இன்னும் ஓரிரு தினங்களில் என் மௌனம் கலையும்

## ரத்ன தேரர் தெரிவிப்பு



அரசாங்கத்துக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் காணப்படும் இதுவரை வெளியிடப்படாத இரகசியங்கள் பலவற்றை எதிர்வரும் ஓரிரு தினங்களில் வெளிப்படுத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

தான் பாராளுமன்றத்தில் சுயாதீனத் தீர்மானம் எடுப்பதற்கும் இவையே காரணமாக அமைந்தது எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தன்மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலையும் அன்றைய தினம் வழங்கவுள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மீது மக்களின் எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் இழக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ள தேரர், இந்த நிலையில் அரசாங்கத்தின் பங்காளராக இருந்து கொண்டு மௌனம் காக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய கூட்டணியை அமைக்க பேச்சு நடத்தும் மகிந்த அணி

## அரசியல் களத்தில் போராடுமாம்



(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை மேலும் பலப்படுத்தி, எதிர்காலத்தில் புதிய பலம்பொருந்திய கூட்டணியாக அரசியலில் களத்தில் போராட தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கூட்டணி தமது நோக்கத்துக்கு எதிராக செயற்படுமாயின், புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதில் பிரச்சினை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்தமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள போதே தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் (விவாதங்களின்போது) தமக்கு போதுமான காலம் கிடைப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்னணியிலேயே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி, சுயாதீனமாக செயற்பட பேச்சுவார்த்தையின் மூலம் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன விளக்கமளித்துள்ளார். (இ-7)

# தேசிய பக்கவாத தின நடைபயணம் ஜனாதிபதி மைத்திரி தலைமையில்

"இருளடைந்த வாழ்வுக்கு ஒளி" தேசிய பக்கவாத தின நடைபயணம் நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்றது.

பக்கவாத நோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டி பக்கவாத நோயை தவிர்க்கும் நோக்குடன் இலங்கை தேசிய பக்கவாத சங்கத்தினால் இந்த நடை பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


பக்கவாத நோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டுவதற்கு இலங்கை தேசிய பக்கவாத சங்கம் மேற்கொள்ளும் சேவையைப் பாராட்டிய ஜனாதிபதி, அச்சங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

ஆரம்பத்திலிருந்தே ஜனாதிபதி சுகாதார துறைக்காக ஆற்றும் சேவையை பாராட்டிய இலங்கை தேசிய பக்கவாத சங்கத்தின் தலைவர் எம்.டி.எம்.ரிப்ஷி , அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

மூளைக்கான குருதி வழங்கலில் சடுதியாக ஏற்படும்தடை காரணமாக பக்கவாதம் ஏற்படுகிறது. உலகில் உயிரிழப்பு ஏற்படுத்தும் நோய்களில் பக்கவாதம் இரண்டாவது இடத்திலுள்ளது. அத்துடன் முதியோர் களை அங்கவீனராக்கும் பிரதான காரணியாகவும் உள்ளது.

நடைபயணத்தில்இலங்கை தேசிய பக்கவாத சங்கத்தின் போஷகர் மருத்துவ கலாநிதி ஜே.பீ.பீரிஸ், நரம்பியல் நிபுணர் மருத்துவ கலாநிதி பத்மா குணரத்ன உள்ளிட்ட சுகாதாரத்துறை அலுவலர்களும் கலைஞர்களும் கலந்து கொண்டனர். (இ-3)

# ஐ.தே.க.சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அதன் தலைவர் ரணில் விசேட உத்தரவு



(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத் தும் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்துமாறு அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வருடத்தில் (2017) கட்சியாக இருந்து முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் குறித்தும் அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அமைச்சர் மலிக் சமரவிக்ரம, உதவிச் செயலாளர் ருவான் விஜேவர்த்தன, மகளிர் பிரிவு தலைவி அனோமா கமகே, இளைஞர் முன்னணியின் தலைவர் அகில விராஜ் காரியவசம், தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் சுதத் சந்திரசேகர ஆகியோரிடமே பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (இ-7)

# ரத்ன தேரரின் தலைமையில் இன்று இலங். தேசிய மகா சபை கூடுகிறது

அத்துரலிய ரத்ன தேரர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய மகா சபை முதற்தடவையாக நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இதில், ஏனைய மதத் தலைவர்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், கலைஞர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின்போது, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய செயற்றிட்டமொன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (இ-7)

## கிம் ஜாங் நாம் படுகொலை விவகாரம்

# வடகொரிய தூதரக அதிகாரியின் மீது மலேசியா கைது நடவடிக்கை எடுக்கும்





கிம் ஜாங் நாம்



கிம் ஜாங் உன்

வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் அண்ணன் கிம்ஜாங்நாம் கொலை வழக்கில் வடகொரிய தூதரக அதிகாரி மீது கைது நடவடிக்கை எடுக்கப்படும் என மலேசியா அறிவித்துள்ளது.

மலேசிய தலைநகர்கோலாலம்பூர் விமான நிலையத்தில், வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் அண்ணன் கிம்ஜாங்நாம்2 பெண்களால்மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த படுகொலையில் வடகொரியாவுக்கு தொடர்பு இருப்பதாக தென்கொரியா நம்புகிறது. மலேசியாவின் சந்தேகப்பார்வையும் அந்த நாட்டின் மீது விழுந்துள்ளது. வடகொரியாவைச் சேர்ந்த 8 பேரிடம் விசாரணை நடத்த மலேசிய பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

ஏற்கனவே இந்தக்கொலை வழக்கில் வடகொரியாவை சேர்ந்த ரி ஜாங் கோல் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் கோலாலம்பூரில் உள்ள வடகொரியா தூதரகத்தின் இரண்டாம் நிலைசெயலாளர்ஹியான் குவாங் சாங்கிடம் விசாரணை நடத்த மலேசிய பொலிஸார் முடிவு செய்துள்ளனர். ஆனால் அவர் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஆஜராவதாக தெரியவில்லை.

இது தொடர்பாக மலேசிய உயர் பொலிஸ் அதிகாரி அப்துல் சமா மாட் நேற்று முன்தினம் கூறும்போது, "இந்த வழக்கில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக தூதரக அதிகாரி ரி ஜாங் கோல் நேரில் ஆஜராக அர்த்தமுள்ள வகையில் அவகாசம் தரப்படும். ஆனால் அவர் பொலிஸ்க்கு தகுந்த ஒத்துழைப்பு தராவிட்டால், மலேசிய சட்டத்தின்படி அவர் ஆஜராவதை கட்டாயப்படுத்தி நோட்டீஸ் தரப்படும். அப்படியும் அவர் ஆஜராகாவிட்டால், அடுத்த கட்ட நடவடிக்கையாக அவரை கைது செய்வதற்கு நீதிமன்றம்மூலம்பிடியாணை பிறப்பிக்கப்படும்" என்று தெரிவித்தார். (இ-12)

# மகிந்தவின் ஆட்சிக்காலத்தை விட தற்போது அரிசியின் விலை குறைவு

## நிதியமைச்சர் கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தை விட அரிசியின் விலை தற்போது குறைந்து காணப்படுகிறது என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் வாழ்க்கை செலவு அதிகரிக்கவில்லை. அத்தியாவசியமான சில பொருட்களின் விலைகள் மாத்திரமே அதிகரித்துள்ளன.

கடந்த அரசாங்கத்தின் காலத்தை விட 23 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

முழு வாழ்க்கை செலவும் தற்போது அதிகரிக்கவில்லை. அரிசியின் விலையை மாத்திரமே குறைக்க முடியவில்லை.

எனினும் கடந்த ஆட்சிக்காலத்தில் 80 ரூபா முதல் 105 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்பட்ட அரிசி தற்போது 72 ரூபா முதல் 100 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது எனவும் நிதியமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தகுதிகள்

எந்தத் தகுதியும் இல்லாமல் சிலர் சூழ்நிலை காரணமாக மிக உயரத்தில் போய் அமர்ந்து விடுகிறார்கள். கூட இருப்பவர்களும் ஏன் சில முன்பின் அறியாதவர்களும் கூட உடனே இவர்களைக் கேலி செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். மேலும் சிலர் பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். இன்னும் சிலர் மேலும் ஒரு கூட்டத்திற்குத் தாண்டிப் போய்க் கெடுதல் வேலையில் இறங்கி விடுகிறார்கள்.

கடுமையாக உழைத்து உயர்ந்தவர்களைக்கூட, இவன் ஊரை ஏமாற்றிப் பிழைக்கிறான்; இதெல்லாம் ஒரு வளர்ச்சியா? என்று வாய் கூசாமல் சொல்லி விடுகிறார்கள். இத்தகைய விமர்சனத்தை நெருங்கி இருந்து பார்க்கிறவர்கள் கூடச் செய்வதுதான் மிக வேதனையானது.

இதுபோன்ற சூழ்நிலையில் இருப்பவர்கள் மற்றவர்களை வெல்வது எப்படி? இவர்கள் வாயை அடைப்பது எப்படி? தங்கள் வளர்ச்சியை இவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வது எப்படி? வழிகள் இருக்கின்றன.

எவ்வளவு வளர்ந்தாலும் உயர்ந்தாலும், ஆ! என்னமாய் வளர்ந்திருக்கிறேன். உயர்ந்திருக்கிறேன். பார் என்று மார்தட்டுவதை முதலில் நிறுத்த வேண்டும்! விரோதிகளையும் வீண் விமர்சனங்களையும் அதிகமாக சம்பாதித்துத் தரும் வேலை இது.

அடிமட்டத்தில் இருப்பவர்கள் வரை அனைவரையும் ஒரு படி கூடுதலாக மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். அதில் பிரியம் இழையோட வேண்டும். சுருக்கமாகச் சொல்வது என்றால் கீழ் மட்டத்திற்கு இறங்கிப் போவதைக் கௌரவக் குறைவாக எண்ணக்கூடாது. எல்லாம் தெரிந்தவர்கள் என்பது மாதிரி காட்டிக் கொள்வதை நிறுத்திவிட்டு எதையும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். மற்றவர்கள் நிலையில் நல்ல மாற்றம் தெரியும்.

தகுதி விடயத்தில் வேறு ஒரு விதமான பிரச்சினை உள்ளவர்கள் உண்டு.

அது தங்கள் தகுதிக்குக் குறைவான இடத்தில்தான் நாம் இன்று இருக்கிறோம் என்ற உறுத்தல். வளர்ச்சியில் மனிதனுக்குத் தாகம் வேண்டியதுதான். ஆனால் அது புலம்பல் இராகமாக இருக்கக்கூடாது. ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும்.

அதுவும் நினைப்போடு இருந்துவிடக்கூடாது. செயல்பூர்வமாக இருக்கவேண்டும். இந்தக் குணமிருந்தால் தகுதிக்கேற்ற இடத்தை நம்மால் அடைய முடிவது ஒன்றும் பெரிதல்ல.

லேனா தமிழ்வாணன்

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

# தீர்வை முன்வைக்க அரசாங்கத்திற்கு கால நீடிப்பை ஐ.நா. வழங்கக்கூடாது

## கிளிநொச்சியில் மனிதவுரிமை ஆர்வலர் வலியுறுத்து

(பனிக்கன்குளம் )

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஐ.நாவின் பரிந்துரைகளைப் பின்பற்றாத இலங்கை அரசாங்கத்தின் ஏமாற்று வேலைகளுக்கு ஐ.நா. சபை கால நீடிப்பு வழங்கி துணை நின்று பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை மறுக்க உதவக்கூடாது என மனித உரிமை ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் நேற்றும் 7 ஆவது நாளாகத் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். இப்போராட்டத்தில் கலந்து கொண்ட மனித உரிமை ஆர்வலரான மன்னார் மறை மாவட்ட அருட்தந்தை மேற்படி கருத்துக்களை வலியுறுத்தியிருந்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட வேண்டும் என்ற மனோ நிலையிலா இலங்கை அரசாங்கம் இருந்து வருகின்றது? இந்த மக்களின் நியாயமான போராட்டத்தைக் குழப்பும் வகையில் பல்வேறுபட்ட சக்திகள் செயற்பட்டு வருகி ன்றன.

அதனடிப்படையில் இலங்கையிலுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்குக் கால நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என கூறியுள்ளதாகவும், கையொப்பமிட்ட கடிதம் அனுப்பியுள்ளதாகவும் பொய்யான பரப்புரைகளைச் செய்து வருகின்றார்கள். அதில் நானும் கால நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறிக் கையொப்பமிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் பொய்யானது. இதன் பின்னணியில் யாரோ இருந்து செயற்படுகின்றார்கள். தயவு செய்து இப்படியான பொய்ப் பரப்புரைகளைச்செய்ய வேண்டாம். இந்த மக்களின் நியாயமான போராட்டத்திற்குத் தீர்வு வழங்கப்படவேண்டும்.

எல்லா வகையிலும் பாதிக்கப்பட்ட நிலையில் தமது உறவுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி ஏங்கி நிற்கும் இந்த மக்களின் போராட்டம் வெற்றி பெற வேண்டும். இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றும் வகையில் யாரும் கால நீடிப்பு வழங்கச் சொல்லிக் கேட்க வேண்டாம். கால நீடிப்பு வழங்குமாறு இலங்கையிலுள்ள மனித உரிமைகள் ஆர்வலர்கள் கூறியுள்ளார்கள். கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார்கள் எனப் பொய்ப் பரப்புரை செய்து மக்களைக் குழப்பிக் குற்றவாளிகளைக் காப்பாற்ற முயல வேண்டாம்என அவர் கேட்டுக் கொண்டார். (2-281)

# அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும்

# எமது கண் முன்னே பிடித்துச் சென்ற எங்களின் பிள்ளைகள் எங்கே?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்து





( பனிக்கன்குளம் )

எமது கண் முன்னே அரச படைகளான இராணுவம் பிடித்துச் சென்ற எமது பிள்ளைகளை எங்களிடம் ஒப்படைக்க நல்லாட்சி அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் மிகுந்த ஏக்கத்துடன் தெரிவித்துள்ளார்கள்.

தமது உறவுகளைப் பிடித்துச் சென்று காணவில்லை எனத் தற்போது கைவிரிக்கும் அரச படைகளும் அவற்றிற்குத் துணை நின்று செயற்படும் இலங்கை அரசும் தமது உறவுகள் எங்கே உள்ளார்கள்? என்ற விபரத்தை வெளியிடுமாறு கோரி நேற்றுடன் 7 ஆவது நாளாகக் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தமது கண் முன்னே தமது உறவுகளைப் பிடித்துச் சென்ற இலங்கை இராணுவமும் இர்ாணுவத் துணைப் படையினரும் தமது உறவுகளை எங்கே ஒளித்து வைத்துள்ளார்கள் என்ற விபரத்தை வெளியிடுவதற்கு நல்லாட்சி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைஎடுத்து உதவவேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

எமது உறவுகள் எங்கே உள்ளார்கள் என்பதனைக் கண்டறிந்து வெளியிடுவதற்கு ஐ.நா. சபை இனியும் காலம் கடத்தாது உரிய நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டும். எமது உறவுகள் எங்கே அரச படைகளால் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உடனடியாக வெளியிட வேண்டும்.

அதனை விடுத்துக் காலத்தைக் கடத்துவார்களாக விருந்தால் எமது போராட்ட வடிவங்கள் எதிர்காலத்தில் மாறும். அதற்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசாங்கமும் ஐ.நா. சபையுமே தான் ஏற்க வேண்டும்.

இரவு பகலாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் கூறிக் கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரது போராட்டத்தில் இன்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு அந்த மக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கான ஆறுதல் வார்த்தைகளையும் கூறி அவர்களது நியாயமான போராட்டத்திற்குத் தாம் தொடர்ந்தும் ஆதரவாக இருந்து குரல் கொடுத்து வருவதாகவும். காணாமல் ஆக் கப்பட்டோரது விடயத்தில் அரசு பாராமுகமாக இருந்து தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாகவும் இவ் விடயத்தில் ஐ.நா. சபை தகுந்த முறையில் தலையிட்டு இம் மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-281)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் கவனயீர்ப்பு

## கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலை. மாணவர் ஒன்றியத்தினரால் முன்னெடுப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகியன தொடர்பில் தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக் கோரி உறவினர்கள் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு பல தரப்பினரின் ஆதரவு வழங்கப்பட்டு வரும் நிலையில் நேற்றுடன் 7 ஆவது நாளையும் எட்டியுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை மேற்படி இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

இம் மாணவர்கள் தமது கைகளில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அம் மக்கள் நல்லாட்சியா நாடக ஆட்சியா? எமது உறவுகள் எங்கே?, என்ற பல பதாகைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் கிளிநொச்சி திரேசா ஆலய முன்றலில் இருந்து ஊர்வலமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கி இருந்தனர். (2-312)




## பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு

# நோயாளர் காவு வண்டி மூலம் நடமாடும் வைத்திய சேவை



கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பில் காணி விடுவிப்பு போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் மக்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் நாளாந்தம் அவ்விடத்திற்கு நோயாளர் காவு வண்டி மூலம் வருகை தந்து நடமாடும் வைத்திய சேவையை வழங்கி வருகின்றனர். இந் நிலையில் தொடர்ச்சியாக 27 நாட்களாக வீதியோரத்தில் போராடி வரும் மக்களில் சிறுவர்கள், முதியவர்கள் தொடர்ச்சியாக வெயிலினாலும் பனியினாலும் நோய்வாய்ப்பட்டு வரும் நிலையில் முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்திய சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)



கிளிநொச்சி பளைக் கோட்டத்திலுள்ள 8 பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. புலம்பெயர்வாழ் அன்பர்களின் நிதியுதவியுடன் கிளி/பளை மத்திய கல்லூரி ஆசிரியராகப் பணிபுரியும் ம.மதிதாஸின் ஊடாக அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டு எதிர்க்கட்சி நாளை தீர்மானம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கூட்டு எதிர்க் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஸ்ரீல.சு.க. உறுப் பினர்களுக்கு விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை தீர்மா னிக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சி சார்பு பாராளு மன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள் ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் கலந்துகொண்டு இதற் கான தீர்மானத்தை எடுக்க வுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீல.சு.க. உறுப்பினர்க ளின் தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித் தார். (இ-7)

# மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் பலி! ஒருவர் காயம்

(கொழும்பு)

மாத்தளை - லக்கல - களுகங்கை வேலைத் திட் டத்தில், அகழ்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த கல் குவாரியில் நேற்று மண் மேடு சரிந்து விழுந்ததில், இருவர் பாதிக்கப்பட்டுள்ள னர்.

இதன்போது ஒருவர் உயி ரிழந்ததுடன், மற்றொருவர் காயங்களுக்கு இலக்காகி யுள்ளார்.

அத்துடன், மற்றுமொரு வர் மண் மேட்டினுள் சிக்கியுள் ளதாகவும் தெரியவந்துள்ளது.

அவரைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

இதேவேளை, ஊழியரைக் காப்பாற்றும் முயற்சிகளுக்கு சில குழுக்களின் உதவி கிடைக்கப் பெற்றுள்ளதாக, களுகங்கை வேலைத்திட் டத்தின் மேலதிக பணிப் பாளர் டீ.பி.விஜேரத்ன தெரி வித்துள்ளார். (இ-7)

# 3 சம்பவங்களில் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு, தலுவகொட் டுவ பிரதேசத்தில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி சென்ற ரயிலில் மோதுண்டு உயிரி ழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது.

சம்பவத்தில் தலுவகொட் டுவ, கொச்சிக்கடை என்ற முகவரியை சேர்ந்த 65 வய தான ஜயசூரிய ஆரச்சிகே பிரேடி வெலிங்டன் பெரேரா என்ற நபரே உயிரிழந்துள் ளார்.

சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள துடன், கொச்சிக்கடை பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர்.

அதேவேளை குருவிட்ட பொலிஸ் பிரிவின் போபத் எல்ல கீழ்ப்பிரிவில் ஒருவ ரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

பட்டுஹேனவத்தை ஹி தெல்ல பிரதேசத்தை சேர்ந்த 36 வயதான ஹட்சன் தன வங்ச என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் காணாமல் போயி ருந்ததாக அவரது மனைவி குருவிட்ட பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து பொலி ஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சட லம் மீட்கப்பட்டதுடன், இரத் தினபுரி வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து குரு விட்ட பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே இரத்தின புரி பாலவெல வீதியின் எல பாத்த பெஃப்கன் பிரதேசத் தில் மோட்டார் சைக்கிள் மதில் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

நெலவ் இப்பாகமுவ பிர தேசத்தை சேர்ந்த 24 வய தான நபரே சம்பவத்தில் இறந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயம டைந்த இவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் உயிரி ழந்ததாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (இ-7)

# ஒரு கிலோ கிராம் ஹெரோயினுடன் பாக்.பிரஜை கைது

ஹெரோயின் போதைப் பொருளுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் பம்பலப்பிட்டி யில் உள்ள ஹோட்டல் ஒன் றில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து ஒரு கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு மேற்கொள் ளப்பட்ட சுற்றி வளைப்பி லேயே அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

32 வயதுடைய சந்தேக நபர் கொழும்பு நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட வுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர் இதேவேளைவெள்ள வத்தை புகையிரத நிலை யத்திற்கு அருகாமையில் 500 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 40 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பில் அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

அவர் கல்கிஸ்ஸ நீத வான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்படவுள்ளதுடன், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

மன்னார் பொலிஸ் நிலை யப் பிரிவிலுள்ள உப்புக்கு ளம் சந்தியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒரு வர் கைது செய்யப்பட்டதாக மன்னார் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மன்னார் பொலிஸாரு க்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இந்த நபர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள 38 வயதான சந்தேக நபரி டம் இருந்து 4.42 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தாம் கைப்பற்றி யதாக பொலிஸார் தெரிவித்து ள்ளனர்.

கைதான சந்தேக நபரி டம் விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் விசார ணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன்சந்தேகநபரை மன்னார் நீதவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தவுள்ள தாகவும் மன்னார் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 999


### அஜி




### சியான்




### சுமித்




### துஷாந்




### டயன்




### கலை




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வீரப்பனை கொன்றது எப்படி விபரிக்கிறார் விஜயகுமார்



சடலமாக வீரப்பன்...

(நேற்றைய தொடர்ச்சி...)

கோப்ரா படையினர் பரபரப்பாக களமிறங்கினர். கடந்த வாரம் முழுக்க அவர்கள் ஒரே ஒரு விடயத்தைப் பயிற்சி செய்திருந்தனர். மூன்றே நிமிடங்களில், 144 மணல் மூடைகளை அடுக்கி, ஐந்து அடி உயரத்தில் ஒரு தடுப்பரண் அமைத்துவிட்டு, அதன் பின்னால் துப்பாக்கியோடு பதுங்கிக் கொள்ள அவர்களால் முடியும். அதை நடமாடும் தடுப்பரண் டீம் செய்தனர். 'ஸ்வீட் பாக்ஸ்' லொறியில் இருந்த வல்லுநர்கள் குழு, தங்கள் கருவிகளை உயிர்ப்பித்தது. அம்புலன்ஸ் அருகில் வந்ததும், கண்காணிப்பு கமரா காட்சிகளை அவர்கள் பார்த்து, இலக்கை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இருளிலும் ஒளிரக்கூடிய நான்கு தடுப்புகளை எடுத்து வந்து, வீதியில் பக்கத்துக்கு இரண்டாக அதிரடிப்படையைச் சேர்ந்த சார்லஸ் வைத்தார். அம்புலன்ஸ் வந்து நிற்க வேண்டிய இடம், அம்புலன்ஸ் சாரதி சரவணனுக்கு தெரியும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'கூம்பு வடிவிலான நான்கு தடுப்புகளுக்கு மையமாக அம்புலன்ஸை நிறுத்த வேண்டும்' என சரவணனுக்கு ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தது.

என்னுடைய ஏகே 47 துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொண்டேன். இரண்டு கைகளையும் உயர்த்தி எல்லோருக்கும் சிக்னல் கொடுத்தேன். இப்போது, எல்லா துப்பாக்கிகளும் அந்தத் தடுப்புகளின் மையத்தை குறிவைத்தன.

இன்னும் 120 நொடிகள்!

'ஸ்வீட் பாக்ஸி'ல் இருக்கும் வல்லுநர்கள் குழுவிடம் சென்ற கண்ணன், பதற்றமாக என்னிடம் ஓடி வந்தார். "வந்து கொண்டிருக்கிற அம்புலன்ஸின் உள்ளே நான்கு பேர் இருப்பது உறுதி. ஆனால், கமராவில் தெரியும் காட்சிகள் கலங்கலாக உள்ளன. கமரா சொதப்பிவிட்டது என்றார்.

ஒரு நொடி எனக்கு மூச்சு நின்றது. தாக்கலாமா? அந்த நான்கு பேரும் வேறு யாராவது அப்பாவிகளாக இருந்தால்? முழுப் பழியும் என் தலையில் விழும். ஒருவேளை வீரப்பன் கும்பலாக இருந்து தாக்காமல் விட்டால், இனி இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்காமலே போகலாம். என்ன செய்வது?

அம்புலன்ஸின் ஹெட்லைட் வெளிச்சம் எங்களை நெருங்கிக்கொண்டே இருந்தது. சில நொடிகளில் முடிவெடுக்க வேண்டும். திரும்பிப் பார்த்தேன். ஹெட்லைட்டோடு மஞ்சள் விளக்கும் எரிந்தது. 'தாக்குவோம்' என தலையாட்டினேன். ஒரு இசையமைப்பாளர்போல கண்ணன் கைகளை உயர்த்தி, எல்லா குழுக்களுக்கும் சிக்னல் செய்தார். எல்லோரும் நிசப்தத்தில் உறைந்தனர். அம்புலன்ஸ் ஓசையைத் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை.

இன்னும் 60 நொடிகள்!


ஒளிரும் தடுப்புகளைப் பார்த்ததும், அம்புலன்ஸை செலுத்தி வந்த சரவணனுக்கு இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. 'கச்சிதமாக பிரேக் போடு. அம்புலன்ஸ் உள்ளே இருக்கும் விளக்குகளின் சுவிட்ச்சைப் போடு. வீரப்பன் கும்பலுக்குச் சுற்றி இருக்கும் எதுவும் தெரியக் கூடாது. ஆனால், அவர்களை நாம் பார்க்க வேண்டும்' என்று தரப்பட்ட கட்டளைகள் ஞாபகத்துக்கு வந்தன.

அம்புலன்ஸ் உள்ளே இருக்கும் மூன்று விளக்குகளின் சுவிட்களையும் ஒன் செய்தார். தன் உடலின் முழு சக்தியையும் வலது காலில் இறக்கி, பிரேக்கை அழுத்தினார். கச்சிதமாக வீதி நடுவே, தடுப்புகளின் மத்தியில் அம்புலன்ஸ் நின்றது. திடீர் பிரேக் கால் டயர்கள் தேயும் வாசனை காற்றில் பரவியது.

அம்புலன்ஸை பின்தொடர்ந்துவந்த திரு. சட்டென தன் வாகனத்தின் ஹெட்லைட்டை எரிய விட்டார். அம்புலன்ஸின் பின்பக்கம் அது வெளிச்சம் பாய்ச்சியது. எல்லா கண்களும் அம்புலன்ஸ் மீது பதிந்தன.

இன்னும் 5 நொடிகள்!

துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டாப்போல, அம்புலன்ஸின் சாரதி சீட்டிலிருந்து சரவணனும், பக்கத்து சீட்டிலிருந்து வெள்ளத்துரையும் குதித்து இறங்கினார்கள். 'கேங்க் உள்ளே இருக்காங்க' என்றபடி சரவணன் எங்களை நோக்கி ஓடிவந்தார். வெள்ளத்துரை ஒரு கையெறி குண்டை அம்புலன்ஸின் உள்ளே போட்டுவிட்டு,




நான்கே நொடிகளில் அது வெடிப்பதற்குள் உசைன் போல்ட் போல ஓடி, பாதுகாப்பான மறைவிடத்தில் சேர்ந்தார். இனி எங்கள் ஆட்கள் துப்பாக்கிச்சூட்டில் சிக்கும் பயமில்லை. கண்ணன் மெகாபோனை எடுத்து எச்சரிக்கை செய்தார்: "உங்களைச் சுற்றி வளைத்திருக்கிறோம். சரணடைந்துவிடுங்கள்" என்றார்.

சில நொடிகள் கடந்தன. அம்புலன்ஸ் உள்ளே இருந்த வீரப்பன் குழுவில் யாரோ முதலில் ஏகே-47 துப்பாக்கியை எடுத்து சுட்டதும், மற்றவர்களும் இணைந்து சுட்டனர். அம்புலன்ஸின் கண்ணாடிகள் நொறுங்கி விழுந்தன. புளியமரத்தில் இருந்த பறவைகள் பதற்றத்தில் பறக்க, எங்கோ தூரத்தில் நாய் குரைக்க ஆரம்பித்தது.

ஒருவேளை நால்வரும் கைகளை உயர்த்தியபடி வெளியில் வந்திருந்தால், அவர்கள் சரணடைவதை நாங்கள் ஏற்றிருப்போம். ஆனால், அவர்கள் சுட ஆரம்பித்ததும் எங்கள் பதிலடி தீவிரமாக இருந்தது. எல்லா திசைகளிலிருந்தும் துப்பாக்கிகள் சீறின. சில நிமிடங்களில் எல்லோரும் துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்தோம். அப்போதும் அம்புலன்ஸ் உள்ளே இருந்து இலக்கற்று யாரோ சுட்டார்கள். கண்ணன் மீண்டும் ஒருமுறை எச்சரிக்கை செய்தார். ஆனாலும், அவர்கள் சுடுவது நிற்கவில்லை. மீண்டும் ஒருமுறை எங்கள் குழு அதிவேகத்தோடு சுட்டது. சில நிமிடங்களில் எல்லோரையும் நிறுத்தச் சொல்லி சிக்னல் செய்தேன். அம்புலன்ஸ் புகையாலும் புழுதியாலும் சூழப்பட்டிருந்தது. அங்கிருந்த அதிரடிப் படையை சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் ராஜராஜன் மற்றும் உசேனிடம் நான் சிக்னல் செய்ய, இன்னொரு கையெறி குண்டு அம்புலன்ஸ் உள்ளே வீசப்பட்டது. அது வெடித்தபிறகு டோர்ச் அடித்தபடியே அம்புலன்ஸை நெருங்கினோம்.

சைக்கிள் டியூபிலிருந்து காற்று வெளியேறுவது போல உள்ளே ஒரு சத்தம். யாரோ மரணத்தின் இறுதி கணங்களில் மூச்சு விடுகிறார்கள் என்பது புரிந்தது. அதன்பின் பெரும் நிசப்தம். இருபது ஆண்டுகள் காத்திருப்பு, இருபது நிமிட என்கவுண்ட்டரில் முடிந்துவிட்டது.

அம்புலன்ஸ் உள்ளே இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வீரப்பன், சேதுமணி, சந்திரகவுடர் ஆகிய மூன்று பேரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி இரத்தவெள்ளத்தில் கிடந்தனர். சேத்துக்குளி கோவிந்தன் தனியாகக் கிடந்தான்.

வீரப்பனை முதன்முதலாக அப்போதுதான் பார்க்கிறேன். மரணத்தின் வாசலில் இருந்த அவனால் பேச முடியவில்லை. இடது கண்ணுக்குள் ஒரு குண்டு துளைத்திருந்தது. வழக்கமான பச்சை சட்டை, பெல்ட் இல்லாமல் சாதாரண உடையில் இருந்த அவனது மீசை 'ட்ரிம்' செய்யப்பட்டிருந்தது. (52 வயதிலும் உறுதியாக இருந்தான். அவனை போஸ்ட்மார்ட்டம் செய்த டாக்டர் வள்ளிநாயகம், 'கண்களில் இருந்த பிரச்சினை தவிர, மற்றபடி 25 வயது இளைஞன் போல வீரப்பன் இருந்தான்' என என்னிடம் பிறகு சொன்னார்.) மீசைக்கு டை அடிக்கும் போது அலர்ஜி ஆகி, அவனுக்குக் கண் பார்வைக்குறைவு ஏற்பட்டது. கண்ணுக்கு சிகிச்சை எடுக்க மீசையைக் குறைத்தவன், கடைசியில் அதனாலேயே இறந்தான். மொத்தமாக 338 குண்டுகளை நாங்கள் சுட்டோம். கோவிந்தன் உடலில் ஏழு குண்டுகள் இருந்தன. இரண்டு குண்டுகள் வீரப்பனைத் துளைத்து வெளியில் வந்திருந்தன. ஒன்று, அவன் உடலிலேயே இருந்தது.

இது வீரப்பனுக்கான என்கவுண்ட்டர் என்பதை அறிந்த எங்கள் ஐந்து பேரைத் தவிர, மற்ற காவலர்கள் திகைப்பில் ஆழ்ந்தனர். 'இது வீரப்பனா அல்லது வீரப்பன் போல இருக்கும் வேறு யாராவதா?' என அவர்களுக்கு சந்தேகம். 'இது வீரப்பன்தான்' என்று சொன்னதும், அவர்களுக்கு உற்சாகம் எகிறியது. என்னை அப்படியே தோள்களில் தூக்கிக்கொண்டனர். வார்த்தைகளற்ற ஆனந்தம் எல்லோர் மத்தியிலும் பரவியது.

என்னை அவர்கள் கீழே இறக்கியதும், பக்கத்தில் இருந்த பாடசாலைக்குச் சென்று, முதல்வர் ஜெயலலிதா வீட்டுக்கு போன் செய்தேன்.

'முதல்வர் தூங்கப் போய் விட்டார். எதுவும் அவசரமான விடயமா?' எனக் கேட்டார், முதல்வரின் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன்.

'நான் சொல்லப்போகும் தகவலை அவர் விரும்புவார்' என்றேன். சில நிமிடங்களில் முதல்வரின் குரல் கேட்டது.

'நாங்கள் வீரப்பனைப் பிடித்துவிட்டோம்' என்றேன். நடந்த என்கவுன்ட்டரை விபரித்துவிட்டு, 'வீரப்பனையும் மற்றவர்களையும் வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளோம். அநேகமாக யாரும் பிழைப்பது சந்தேகம்' என்றேன். எங்களுக்கு வாழ்த்து சொன்ன முதல்வர், அதிரடிப்படையினர் யாருக்கேனும் காயம் ஏற்பட்டதா என்பதையும் விசாரித்தார். 'முதல்வராகப் பதவியேற்ற காலத்திலிருந்து நான் கேட்ட மிக நல்ல செய்தி இதுதான்!' எனச் சொல்லிவிட்டு போனை வைத்தார்.

நான் திரும்பி அம்புலன்ஸைப் பார்த்தேன். அதன் உச்சியில் இருந்த நீல விளக்கு இன்னமும் எரிந்தபடி சுழன்றுகொண்டிருந்தது. இவ்வளவு பெரிய துப்பாக்கிச் சண்டையில், அதன் மீது ஒரு குண்டுகூட படாதது பெரும் ஆச்சரியம்.




சல்லடையான ஆம்புலன்ஸ்...

(முற்றும்)

ஜூனியர் விகடன்

# யாழ்.ஐரி ஹப்பின் ஊக்கி பயிற்சிநெறி

Yarl IT Hub நிறுவனமானது யாழ்ப்பாணத்தை அடுத்த சிலிக்கன் பள்ளத்தாக்காக மாற்றுவதை நோக்கமாக கொண்டு கடந்த ஐந்து வருடங்களாக இயங்கி வரும் ஓர் இலாப நோக்கற்ற சமூகக் குழுமமாகும். இந்நிறுவனம் முயற்சியாண்மையில் ஆர்வமுள்ளவர்களுக்கான போட்டிகளையும், அவர்க்ளுக்கான அனைத்து உதவிகளையும் செய்து வருவதோடு, பாடசாலை மாணவர்களின் புத்தாக்கத்திறனை மேம்படுத்துவதற்கான பல செயற்பாடுகள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கருத்தரங்கங்கள், திறந்தமூல தொழிநுட்பங்களை பயன்படுத்திப் பல செயற்றிட்டங்கள், ஆசிரியர்களுக்கான தகவல் தொழில்நுட்பம்சார் பயிற்சிகள் எனப் பல விதத்திலும் முயற்சி யாண்மைக்கு அடிப்படையான கட்டமைப்புகளை உருவாக்கிவருகிறது.

இந்நிறுவனத்தின் புதியதோர் முயற்சியாக SERVE அறக்கட்டளையுடன் இணைந்து ஊக்கி எனும் முற்றிலும் தொழில்வாய்ப்பினைக் கருத்திற்கொண்ட பயிற்சி நெறியை ஆரம்பிக்க இருக்கிறது.

முயற்சியாண்மைக்கு மிகவும் அவசியமான மனித வளங்களை உருவாக்கவும் ஏற்கனவே இருக்கின்ற நிறுவனங்களின் மனித வளத்தேவைக்கான கேள்வியை கருத்திற்கொண்டும் எமது மண்ணில் க.பொ.த. உயர்தரத்திற்குத் தோற்றிப் பின் பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்க்காக இந்த பயிற்சிநெறியை ஆரம்பித்துள்ளது. க.பொ.த உயர்தரத்தில் தோற்றும் மாணவர்களில் மிக அண்மைய கணிப்பீட்டின் படி ஏறக்குறைய 16% ஆனவர்களே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகிறார்கள். ஏனையவர்களில் மிகச் சொற்பமானவர்கள் தொழில்கல்வியில் சேர்ந்துகொள்கிறார்கள். அவர்களின் தொழில்வாய்ப்புகளை உறுதிசெய்வதற்காக இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படுகிறது. இந்த ஊக்கி பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் முன்னணி கணினி மென்பொருள் அபிவிருத்தி நிலையங்களில் தம்மை இணைத்துக்கொள்ளவோ அல்லது தாமாகவே சுயமாக ஒரு தொழிலைத் தொடங்குவதற்கோ அவசியமான அறிவை இந்த 6 மாத முழுநேரப் பயிற்சி நெறியில் பெறுவர்.

இச்செயற்றிட்டத்தினை பல முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து Yarl IT Hub வழங்கவிருக்கிறது. அத்தோடு, விரிவுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்நுட்ப வல்லுநர்களால் வழங்கப்படவிருக்கின்றன. முக்கியமாக இப்பயிற்சி நெறி 100% புலமைப்பரிசிலடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது. தெரிவுசெய்யப்படும் அனைத்து மாணவர்களும் பயிற்சியை இலவசமாகப் பெறலாம்.

இப்பயிற்சிநெறியில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

1. மென்பொருள் அபிவிருத்தி (Full Stack Software Development)
2. அடிப்படை வணிகம் (Basic Business)
3. பேச்சு ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன்
4. தனியாள் வழிகாட்டல் ( Personal Coaching)

இதற்குரிய விண்ணப்பங்களை www.uki.life/apply என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

www.uki.life எனும் இணையத்தளத்தினூடாகவோ 0775694587 எனும் தொலைபேசி மூலமாகவோ info@uki.life மின் அஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# தொழில்நுட்பப் பட்டதாரியாகும் வாய்ப்பு

# SLIIT யாழ். நிலையத்தில் ஆரம்பம்

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட முன்னோடிப் பட்டமளிப்பு நிறுவனமாகும்.

இந் நிறுவனம் கணினி, வியாபாரம், பொறியியல் துறைகளில் விஞ்ஞான இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களை வழங்கி வருகின்றது. எமது நிறுவனத்தில் க.பொ.த உயர் தரத்தில் ஒரு சாதாரண சித்தியுடன் (1 'S') சாதாரண உள்நாட்டு படிப்பையோ அல்லது வெளிநாட்டு சிறப்புப் பட்டப்படிப்பையோ தொடர முடியும். உள்நாட்டு சிறப்புப் பட்டப்படிப்பை தொடர வேண்டுமாயின் க.பொ.த உயர் தரத்தில் 3 சாதாரண சித்திகள் (3 S) பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம்

1 - தகவல் தொழிநுட்பம்
2 - கணனி முறைமை பொறியியல்
3 - மென்பொருள் பொறியியல்
5 - ஊடாடு ஊடகத்துறை
6 - சைபர் பாதுகாப்பு

வியாபார நிர்வாகம் தொடர்பில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட வியாபார இளமாணி (சிறப்பு) பட்டம்

1 - மனித மூலதன முகாமைத்துவம்
2 - கணக்கீடும் நிதியும்
3 - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
4 - முகாமைத்துவம் தகவல் முறைமை
5 - தர நிர்ணய முகாமைத்துவம்

பொறியியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம்

1 - சிவில் பொறியியல்
2 - மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல்
3 - மூலக்கூறு பொறியியல்
4 - இயந்திரவியல் பொறியியல்
5 - இயந்திரவியல் பொறியியல் (இயந்திரச் செயல்முறை)

போன்ற சிறப்பு பட்டப்படிப்புக்களுடன் மேலும் சாதாரண சான்றிதழ் பயிற்சி நெறிகளான

1 - AutoCAD
2 - Web Development using PHP/MysQL
3 - Graphic Design & Multimedia
4 - Mobile Application Development
5 - Ethical Hacking & cyber Forensics Programme
6 - Programming with Microsoft C# NET
7 - JAVA Programming

கொழும்பிலும், மாலபேயிலும் 2 பல்கலைக்கழகங்களும் மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் ஆகிய இடங்களில் கல்வி நிலையங்களும் உள்ளன.

9000+ அலுமினியுடன் சேர்ந்து தற்போது இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகத்தில் 7000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிற்று வருகின்றனர்.

25 ஏக்கர் காணியில் 2 இலட்சம் சதுர அடிகளுக்கு மேற்பட்ட கட்டிடப் பரப்பளவினைக் கொண்ட எமது மாலபே பல்கலைக்கழகம், விரிவுரை மண்டபங்கள், ஆய்வு கூடங்கள், கேட்போர் கூடங்கள், தொடர்பாடல் வசதிகள், சிற்றுண்டிச்சாலைகள், விளையாட்டுத்திடல், ரென்னிஸ் அரங்குகள், கூடைப்பந்து, மேசைப் பந்து அரங்குகள் மற்றும் நடைப்பயிற்சி சுவடு போன்ற வசதிகளையும் கொண்டுள்ளது. மேலும் பல முன்னணிப் பேராசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் இலங்கை பட்டப்படிப்புகளுடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, ஐக்கிய இராச்சியம் போன்று நாடுகளின் முன்னிலை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல சர்வதேச பட்டப்படிப்புக்களையும் ஒரே கூரையின் கீழ் வழங்கி வரும் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரே நிறுவனம் என்ற சிறப்பையும் SLIIT கொண்டுள்ளது.

பட்டப்படிப்பின் முதல் வருடத்தை மாணவர்கள் தங்களது வீட்டில் இருந்தவாறே எமது யாழ் நிலையத்தினூடாக தொடர முடியும். இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ்ப்பாண நிலையமானது இல. 53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இதன் தொலைபேசி இலக்கங்கள் 021 7200406, 021 7200407, மின்னஞ்சல் Infojaffna @sliit.lk மற்றும் மேலதிக விபரங்களுக்கு www.sliit.lk என்ற இணையத்தளத்தையும் பார்வையிடலாம்.

முதல் வருடப் படிப்பை யாழ். வளாகத்தில் மாணவர்கள் தொடர்வதால் ஏற்படும் நன்மைகள்:

1- வீட்டிலிருந்தவாறே யாழ். நிலையத்தில் வந்து படிப்பைத் தொடர முடியும்.

2- online பரீட்சை, online ஒப்படைகள் போன்ற செயன்முறைகளை தமது சொந்த மொழியிலேயே விளக்கத்துடன் தொடர அரிய சந்தர்ப்பமாக அமையும்.

3- மேலதிக விரிவுரை விளக்கங்களை சொந்த மொழியிலேயே பெற அரிய வாய்ப்பு.

4- தங்குமிடம், சாப்பாடு போன்ற மேலதிக செலவுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

5- படிப்பதற்கான சூழலை யாழ் மண்ணிலிருந்தே ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம்.

எனவே மாணவர்களே, தொழில்புரிவோரே! உங்கள் பட்டப்படிப்பு கனவு நனவாக இன்றே உங்கள் யாழ் மண்ணிலுள்ள SLIIT கற்கை நிலையத்திற்கு விஜயம் செய்து உங்களுக்குரிய பட்டப்படிப்பை தெரிவு செய்து உங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள்.

மேலும் CAMBRIDGE ENGLISH பயிற்சிநெறிகளும் யாழ். கற்கை நிலையத்தில் நடைபெறுகின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தமது ஆங்கில அறிவை மேம்படுத்த கீழ்க்காணும் பயிற்சிநெறிகளில் ஒன்றைத் தெரிவு செய்து பயில முடியும்.

1. Cambridge English: Preliminary (PET) Qualification
2. Cambridge English: Key (KET) Qualification
3. Cambridge English: First (FET) Qualification

தொடர்புகளுக்கு: இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்
யாழ்ப்பாண நிலையம்
53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0217200406

# புறமோட் கொப்பிகள் விற்பனையில் சாதனை

இலங்கையின் அப்பியாசக் கொப்பிகளில் முன்னணி வகிக்கும் வர்த்தக நாமமான ProMate சர்வதேச நியமங்களுக்கமைய உற்பத்திச் செய்யப்படுகின்றன. புதிய தவணைக்காகப் பாடசாலைகள் மீள திறக்கப்படும் காலப்பகுதியில் புதிய விற்பனையில் சாதனையை படைத்திருந்ததாக, நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி நலிந்த ஜயமான்ன தெரிவித்தார். Rathna பிரசுரங்களின் பரந்த அறிமுகங்களில் பிந்திய வெளியீடாக, ProMate அமைந்துள்ளது. புத்தகங்கள் வெளியீட்டில் 50 ஆண்டுகளுக்கு அதிகமாக ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. புதிய விற்பனை பெறுமதியை




எய்தியுள்ளமை தொடர்பில், ProMate அப்பியாசக் கொப்பிகளின் வெளியீட்டு நிறுவனமான, Printxcel இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி நலிந்த ஜயமான்ன தொடர்ந்து தெரிவிக்கையில், "சந்தையில் ProMate அப்பியாசக் கொப்பிகளின் அறிமுகத்துடன், பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகவும் குறுகிய காலப்பகுதியில் இந்தத் தயாரிப்புகள் மிகவும் பிரபல்யமடைந்துள்ளன. எமது வர்த்தக நாமம் பரந்தளவில் அதிகளவு வரவேற்பைப் பெறுவதற்கு பிரதான காரணியாக, உயர்ந்த தரம் மற்றும் கண்கவர் உயர் அலங்கார வடிவமைப்பு அமைந்துள்ளது. இந்தப் பிரத்தியேகமான உள்ளம்சங்கள் காரணமாக, எம்மால் புதிய விற்பனை சாதனைப் பெறுமதியை எட்டக்கூடியதாக இருந்தது. 2-வதாக, மாணவர்களுக்கு இலகுவாக எமது தயாரிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு, வழிவகுத்த நாடு முழுவதையும் சேர்ந்த எமது விநியோகஸ்த்தர்களுக்கும், மற்றும் சகல ஊழியர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

# வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி | 6,159.87 | 6,138.14 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,543.63 | 3,553.11 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,868.335

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ஹரிச்சந்திரா(2896.40), கெல்சே(49.90), லைகி லங்கா(2.90), சொரன(21.00), பான் ஏசியா(7.00).

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.): எஸ்எம்பி லீசிங்(0.20), சலிமார்(1726.60), சிலோன் பிறின்டர்ஸ்(50.00), புளு டைமன்ட்ஸ்(0.40), அமானா லைவ்(1.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.32 | 154.21 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 186.24 | 192.73 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.62 | 163.77 |
| சுவிஸ் பிராங் | 147.71 | 153.69 |
| கனேடிய டொலர் | 113.50 | 118.06 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.32 | 119.49 |
| சிங்கப்பூர் டொலர் | 105.71 | 109.66 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.25 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# குருவி கொடுத்த விதை

…அதை மீண்டும் கூட்டில் வைத்தான். வேளா வேளைக்கு உணவு தந்தான்.

சில நாட்களில் அந்தக் குருவியின் கால்கள் சரியாயின. அங்கிருந்து அது பறந்து சென்றது. உழவனும் குடும்பத்தினரும் வறுமையில் வாடினார்கள்.

" இப்படியே அரை வயிறு சாப்பிட்டு எவ்வளவு காலம் வாழ்வது? நமக்கு விடிவே கிடையாதா?" என்றாள் மனைவி. அப்பொழுது அவர்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கதவை திறந்தான் அவன். அவன் வளர்த்த குருவி வெளியே இருந்தது. அதன் வாயில் ஒரு விதை இருந்தது. அதை அவன் கையில் வைத்தது. " இதை உன் வீட்டுத் தோட்டத்தில் நடு. சிறிது நேரத்தில் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் பறந்தது அது.

மீண்டும் வந்தது அது. இன்னொரு விதையைத் தந்தது. " இதை உன் வீட்டின் முன்புறத்தில் நடு" என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

மூன்றாம் முறையாக வந்த அது இன்னொரு விதையைத் தந்தது " இதை ஜன்னல் ஓரம் நடு. என் மீது காட்டிய அன்பிற்கு நன்றி" என்று சொல்லி விட்டுப் பறந்தது.

குருவி சொன்னபடியே மூன்று விதைகளையும் நட்டான் அவன்.

மறுநாள் காலையில் அங்கே மூன்று பெரிய பூசணிக்காய்கள் காய்த்து இருந்தன. இதைப் பார்த்து வியப்பு அடைந்தான் அவன்.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டிற்குள் கொண்டு வந்தான். அதை இரண்டு துண்டாக வெட்டினான்.



என்ன வியப்பு! அதனுள் இருந்து விதவிதமான உணவுப் பொருட்கள் வந்தன. சுவையான அவற்றை எல்லோரும் மகிழ்ச்சியாக உண்டனர். மீண்டும் அந்தப் பூசணிக்காயை ஒன்று சேர்த்தனர். பழையபடி அது முழுப் பூசணிக்காய் ஆனது.

மகிழ்ச்சி அடைந்த அவன், " இது மந்திரப் பூசணிக்காய். நமக்கு உணவு தேவைப்படும் போது பிளந்தால் உணவு கிடைக்கும். மீண்டும் சேர்த்து விட்டால் பழையபடி ஆகி விடும். இனி நமக்கு உணவுப் பஞ்சமே இல்லை" என்றான்.

" வீட்டின் முன் புறத்தில் ஒரு பூசணிக்காய் உள்ளது. அதைக் கொண்டு வாருங்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்து விடலாம்" என்றாள் மனைவி.

அந்தப் பெரிய பூசணிக்காயை உருட்டிக் கொண்டு வந்தான் அவன். கத்தியால் அதை வெட்டினான். உள்ளிருந்து அழகான ஆடைகள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசணிக்காயையும் கொண்டு வந்து வெட்டினான். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின.

தொடரும்…




- 1560 - ஸ்கொட்லாந்தில் இருந்து பிரெஞ்சுக்காரரை வெளியேற்ற ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் பேர்விக் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1594 - பிரான்சின் மன்னனாக நான்காம் ஹென்றி முடிசூடினான்.
- 1700 - புதிய பிரித்தானியா தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1801 - வோஷிங்டன், டிசி நகரம் அமெரிக்க காங்கிரசின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.
- 1844 - டொமினிக்கன் குடியரசு ஹெயிட்டியிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1861 - போலந்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து வார்சாவில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
- 1879 - சக்கரீன் என்ற செயற்கை இனிப்பூட்டி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் போவர்களின் தளபதி பியெட் குரோனியே நிபந்தனையின்றி சரணடைவதாக அறிவித்தார்.
- 1900 - பிரித்தானிய தொழிற் கட்சி அமைக்கப்பட்டது.
- 1933 - பேர்லினில் ஜேர்மனியின் நாடாளுமன்றம் தீ வைத்து எரிக்கப்பட்டது.
- 1940 - ரேடியோ கார்பன் என்ற கரிமம்-14 கண்டுபிடிக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவா கடலில் இடம்பெற்ற சமரில் கூட்டுப் படைகளை ஜப்பான் படைகள் தோற்கடித்தன.
- 1951 - ஐக்கிய அமெரிக்காவில் அதிபர் ஒருவர் இருதடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாதவாறு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.
- 1967 - டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - முன்னாள் ஸ்பானிய நாடான மேற்கு சகாரா சாராவி அரபு சனநாயகக் குடியரசு என்ற பெயரில் விடுதலையை அறிவித்தது.
- 1991 - வளைகுடாப் போர்: அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் குவெய்த் விடுதலையானதாக அறிவித்தார்.
- 2002 - குஜராத் வன்முறை 2002: அயோத்தியாவில் இருந்து புகையிரதத்தில் திரும்பிக் கொண்டிருந்த 59 இந்துப் பயணிகள் கோத்ரா புகையிரத நிலையத்தில் வைத்து முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் நடந்த கலவரத்தில் 1000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2004 - பிலிப்பைன்சில் பயணிகள் கப்பலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 116 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - மட்டக்களப்பு நகரில் உள்ள இலங்கை விமானப் படையினரின் விமான ஓடு பாதையை நோக்கி விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் இலங்கைக்கான அமெரிக்க, இத்தாலியத் தூதுவர்கள் காயமடைந்தனர்.

பிறப்புகள்

- 1912 - குசுமாகரசு, இந்திய எழுத்தாளர் (இ. 1999)
- 1932 - எலிசபெத் டெய்லர், ஆங்கிலேய-அமெரிக்க நடிகை (இ. 2011)
- 1934 - ரால்ஃப் நேடர், அமெரிக்க அரசியல்வாதி
- 1944 - கிரகாம் பொலொக், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்
- 1962 - இராபர்ட். ஸ்பென்சர், அமெரிக்க எழுத்தாளர்
- 1975 - கிறிஸ்டோபர் பி. வைண்டன், அமெரிக்க இயக்குநர்
- 1977 - ஜேம்ஸ் வான், மலேசிய-ஆத்திரேலிய இயக்குநர்
- 1982 - புருனோ சோரெசு, பிரேசிலிய டென்னிசு வீரர்
- 1983 - முகம்மது நபௌசு, லிபிய ஊடகவியலாளர் (இ. 2011)

இறப்புகள்

- 1921 - இசுக்கோஃபீல்ட் கைது, ஆங்கிலேயத் துடுப்பாளர் (பி. 1871)
- 1931 - சந்திரசேகர ஆசாத், இந்திய செயற்பாட்டாளர் (பி. 1906)
- 1936 - இவான் பாவ்லோவ், நோபல் பரிசு பெற்ற உருசிய மருத்துவர் (பி. 1849)
- 2008 - சுஜாதா, எழுத்தாளர் (பி. 1935)
- 2014 - ந. பாலேஸ்வரி, ஈழத்துப் புதின எழுத்தாளர் (பி. 1929)

சிறப்பு நாள்

- டொமினிக்கன் குடியரசு - தேசிய நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 70 | 120 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 180 | 200 | 100 | 180 |
| தக்காளி | 100 | 40 | 40 | 40 | 40 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 30 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 50 | 60 | 40 | 60 | 50 | 120 | 50 |
| பூசணி | 100 | 60 | 30 | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 150 | 110 | 80 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 400 | 200 | 180 | 200 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 100 | 100 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 140 | 140 | 200 | 160 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 60 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 80 | 100 | 40 | 50 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 160 | 200 | 130 | 160 | 140 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 500 | 400 | 800 | 250 |
| இஞ்சி | 160 | 200 | 100 | 100 | 100 | 160 | 300 |
| கத்தரிப்பிள்ளை | 100 | 100 | 60 | 100 | 130 | 80 | 80 |
| கீரை-பிடி | 30 | 20 | 30 | 40 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 100 | 120 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 20-50 | 50 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 180 | 180 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 40 | 50 | 80 | 80 | 40 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 50 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 50 | 80 | 60 | 60 |

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
– பாவேந்தர் பாரதிதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்கள் சொந்த நிலத்தை மீட்போம் என்றே சங்கே முழங்கு

சங்குகளில் மிகவும் பெறுமதியானது வலம்புரி. தெய்வீகத் தன்மை பொருந்திய வலம்புரி ஆயிரம் இடம்புரிகளின் நடுவுநிலையில் இருப்பது.

கிருஷ்ண பரமாத்மாவின் கரத்தில் வலம்புரி இருப்பதால் அதற்குப் பெருமை என்பது மட்டுமல்ல, குருஷேத்திரப் போரில் கிருஷ்ண பரமாத்மா வலம்புரிச் சங்கெடுத்து முழங்குகிறார்.

வலம்புரியின் சங்குநாதம் தர்மத்தைக் காப்பதற்கானது. அதர்மத்தை அழிப்பதற்கானது.

ஆக, வலம்புரியின் பெருமைக்கு இதுவும் காரணம் என்றறிய முடியும்.

தெய்வீகத் தன்மை பொருந்திய வலம்புரியால் இறைவனுக்குச் செய்யப்படும் அபிடேகம் எல்லாப் பேற்றையும் தரவல்லது என்பது வேதங்களின் முடிபு.

இதனாலேயோ என்னவோ, சங்கே முழங்கு என்று பாவேந்தர் பாரதிதாசன் பா வடித்தான்.

வலம்புரிச் சங்கின் முழக்கம் நிச்சயம் தர்மத்தை நிலைநாட்டும் என்ற நம்பிக்கை அன்று மட்டுமல்ல; இன்றும் என்றும் இருக்கும்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்னமும் தம் சொந்த நிலத்துக்குச் செல்ல முடியாத வேதனையோடு, இரவல் வீடுகளிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் காலம் கழிக்கும் எங்கள் உறவுகளின் அவலம் சொல்லுந்தரமன்று.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய எங்கள் சொந்த நிலத்தை மீட்பது எப்படி? இது பற்றி யாரிடம் முறையிடுவது என்ற ஏக்கத்தின் விளைவாக கேப்பாப்பிலவு மக்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

அந்த முடிவுதான் சொந்த நிலத்தை மீட்கும் வரை தொடர் போராட்டம் நடத்துவதென்பதாகும்.

இன்றுவரை 28 நாட்கள் என்ற எண்ணிக்கையை எட்டித் தொடர் போராட்டம் நடத்துவதென்பது சாதாரணமான விடயமல்ல.

இஃது அந்த மக்களின் மன உறுதியை தெட்டத்தெளிவாக காட்டி நிற்கின்றது.

அதேவேளை அந்த மக்களின் நிலமீட்புக்கான தொடர் போராட்டத்துக்கு எங்கள் வகிபங்கு என்ன என்பதை நம் ஒவ்வொருவரும் எம்மிடம் கேட்கவேண்டுமல்லவா?

கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் அநாதைகளா? அவர்களுக்கு நாம் உறவுகள் இல்லையா? தனிப்பட்ட விடயம் காரணமாகவா அவர்களின் நிலத்தை படையினர் கபளீகரம் செய்து வைத்துள்ளனர்.

இந்த நியாயமான கேள்விகளை நாம் எம்மிடம் எழுப்புவோமாக இருந்தால்...

அவர்கள் எங்கள் உறவுகள். அவர்களின் நில மீட்புப் போராட்டம் நியாயமானது. ஆகையால் எங்கள் ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாம் வெளிக்காட்டுவது கட்டாயமானது.

அதற்காக இது அரசுக்கு எதிரான போராட்டம் என்று யாரேனும் நினைப்பார்களாயின் இதைவிட்ட அதர்மத்தனம் வேறுஎதுவுமாக இருக்க முடியாது.

எனவே எங்கள் உறவுகளின் நில மீட்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பொது அமைப்புக்கள் கூடி ஆராய வேண்டும்.

எங்கள் சொந்த நிலத்தை மீட்போம் என்றே சங்கே முழங்கு என்ற கோசம் நிலம் இழந்த அத்தனை மக்களுக்குமான கோசமாக எழுந்து ஆர்ப்பரித்து, சொந்த நிலத்தை மீட்டு தர்மத்தைக் காப்பது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# கீத் நொயர் கடத்தலில் எனக்கு தொடர்பில்லை

## கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்

'தி நேசன்' ஆங்கில நாளிதழின் இணை ஆசிரியராக பணியாற்றிய கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தனக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் ஆங்கில வார இதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் பாதுகாப்புச் செயலராக இருந்த போது கொழும்பில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக புலனாய்வு அதிகாரிகளுடன் கிரமமான சந்திப்புகளை நடத்துவது வழக்கம்.

போர் நடந்த காலகட்டத்தில் புலனாய்வு அதிகாரிகளுடன் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கூட்டங்களை நடத்துவேன்.

இந்தக் கூட்டங்களின் மூலம் வெற்றிகரமாக விடுதலைப் புலிகளின் இரகசிய செயற்பாட்டாளர்களை அடையாளம் கண்டு கொழும்பில் சில தாக்குதல்களையும் தடுக்க முடிந்தது.

பாதுகாப்புச் செயலராக பணியாற்றிய போது இராணுவ அதிகாரிகளுக்கு அவர்களின் கடமைகளுக்கு அப்பால் செயற்படுவதற்கான உத்தரவுகளை இடும் அதிகாரம் எனக்கு இருக்கவில்லை.

யாரோ செய்த குற்றங்களை என்மீது சுமத்துவது நியாயமற்றது. உண்மையான குற்றவாளிகளை அதிகாரிகள் கைது செய்ய வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கூகுள் நிறுவனத்திற்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை

கூகுள் நிறுவனம் சட்டத்துக்கு இணங்க மறுக்கும் பட்சத்தில் விரும்பத்தகாத பல விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ரஷ்யாவின் ஏகபோக உரிமைக்கு எதிரான மத்திய அமைப்பின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு, தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் அதன் ஆண்ட்ராய்ட் மொபைல் இயங்கு அமைப்பை கொண்டு தன் சந்தைப் பகுதியை தவறாக பயன்படுத்தியதாக ரஷ்ய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருந்தது.

ரஷ்யாவின் மிகப்பெரிய தேடுதளமான யாண்டெக்ஸ் உட்பட கூகுள் நிறுவனத்தின் போட்டி தேடு தளங்களுக்கு தடை விதித்து கூகுள் தயாரிப்புக்களை தனது உற்பத்தி நிலையிலேயே சேர்க்க உற்பத்தியாளர்களை கட்டாயப்படுத்தியது ஆகியன இதில் அடங்கும்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள கூகுள் மேல்முறையீடு செய்துள்ளது. கடந்த ஆண்டு இதே போன்று கூகுளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விசாரணை நடத்தியது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் செட்டியார் கட்டை அடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**ஸ்ரீதேவியும் மூத்த பகவதியும் வாசம் செய்யும் இடம் எது?**




உடலைத்தேய்த்துக் குளிக்கும் போது முதலில் முகத்தை தேய்க்க வேண்டும். குளித்து முடித்து துவட்டும் போது முதலில் முதுகைத் துடைக்க வேண்டும். இதற்கும் காரணம் உண்டு.

நமது முகத்தில் தான் ஸ்ரீதேவி வாசம் செய்கிறாள். முதுகுப் புறத்தில் மூத்த பகவதி வாசம் செய்கிறாள். இரண்டு பேருமே வணக்கத்திற்கு உரியவர்களாவர். ஒருவரை வணங்கினால் அடுத்தவர் கோபித்துக் கொள்வார். எனவே இருவரையும் வணங்க வேண்டியுள்ளது.

ஆகவே தான் குளிக்கத் தொடங்கும் போது முதலில் லட்சுமியை வணங்குவதற்காக முகம்தேய்த்து குளிக்கச் சொன்னார்கள். குளித்து முடித்தவுடன் முதலில் முதுகுப் புறத்தைத் துவட்டி பகவதியை வணங்கச் சொன்னார்கள்.

இரண்டு தேவியர்களின் ஆசியோடு ஈரத்துணி உடுத்தி கோவில் தரிசனம் நடத்தி திருப்தியடைய வேண்டும். (தொடரும்)

# சாஸ்திரங்கள்

✦ உங்கள் வீட்டில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தால் கண்ணூறு தாக்கியிருப்பதாக உறுதி செய்து உங்கள் வீடு முழுக்க உப்பு கலந்த நீரால் கழுவி விட்டால் கண்ணூறு போய்விடும்.

-கண்ணூறு கழித்தல்

✦ அடுக்கு அரளி, செம்பருத்தி பூக்களைக் கொண்டு இறைவனுக்கு பூஜை செய்வதனால் ஞானம் பெருகும். தொழில் விருத்தியடையும்.

-மகாபாரதம்

✦ பாசிப்பச்சை, மரிக்கொழுந்து உபயோகித்து பூஜை செய்தால் நல்ல விவேகமும் சுகபோகமும் புதபகவானின் அருளும் கிடைக்கும்.

-மகாபாரதம்

✦ அகத்தைச் சீராக வைத்திருப்பது சீரகம். சீர்+ அகம் என்பதே சீரகம் என்றாயிற்று. தினமும் சீரகம் கொஞ்சம் சாப்பிட்டு வந்தால் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். உடல் குளிர்ச்சியாகவும் இருக்கும்.

-சைவ பூஷணம்

✦ இரவில் ஒரு மணிநேரம் கல்வியைக் கற்றுத் தருவது அந்த இரவு முழுக்க நின்று இறைவனை வணங்குவதை விட சிறப்பானதாகும்.

-குர் ஆன்

✦ வடகிழக்கில் இடி முழங்கினாலும் குமுறினாலும் உடனே மழை பெய்யும்.

-பிருஹத் சம்ஹிதை

✦ இறந்த ஆண்களை தகனம் செய்யும் போது மல்லாக்கப் போட்டும் இறந்த பெண்களை தகனம் செய்யும்போது குப்புறப் போட்டும் தகனம் செய்தல் வேண்டும்.

-விவகார சாரசங்கிரகம்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



## பொருளும் நிகழ்ச்சியும்

நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சிதான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள், தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

ஆனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்ப டையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத்துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக் கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில், கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின் றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணு வாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

### துளசிராம்,பிரசாந் சிறப்பாட்டம்

# கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி சைனிங்ஸ் அணி சம்பியன்



துளசிராம், பிரசாந் ஆகியோரின் அனல்பறந்த அசத்தல் ஆட்டம் மூலம் ரேவடி, நேதாஜி, உதயசூரியன் அணிகளை வீழ்த்தி சம்பியனானது சைனிங்ஸ் அணி.

வல்லை விளையாட்டுக் கழகம் நடத்தும் வல்லை விளையாட்டுப்பெருவிழாவின் ஓர் அங்கமான கடற்கரை கரப்பந்தாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மின்னொளியில் ரேவடி உல்லாசக் கடற்கரையில் இடம்பெற்றது.

முதல்போட்டியில்ரேவடிஅணியை 21:17, 21:15 என வெற்றி கொண்டு அரையிறுதியில் நேதாஜி அணியை 18:21, 25:23, 15:11 எனவும் அபார ஆட்டம் மூலம் வீழ்த்தி இறுதிப் போட்டியில் உதயசூரியன் அணியை 21:18, 21:16 என்ற நேர்செட்டில் வெற்றிவாகை சூடி கடற்கரை கரப்பந்தாட்ட (Beach Volleyball) சம்பியன் பட்டத்தை வென்றது சைனிங்ஸ் அணி. (க)

# உரும்பிராய் சரஸ்வதி வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## நவஜீவன்ஸ் வெற்றி



உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம்நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப் போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 5:1 என்ற அடிப்படையில் வெற்றி ஈட்டியது.

ஆட்டம் தொடக்கம் இறுதி வரை நவஜீவன்ஸ் ஆதிக்கம். இடைவேளை முன்பு 2 கோல்களும் பின் 3 கோல்களும் பதிவாகின. இவ் ஆட்டத்தில் ஆட்ட நாயகனாக கு.கோபிநாத் தெரிவானார். சிறப்பாக விளையாடி சுரேஷ் (மன்னன்) 2 ,கோபி நாத் 1, பொபிநாதன் 1, ருபேந்திரன் 1 கோலாகினார்கள். (க)

# நவஜீவன்ஸ் வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



நவஜீவன்ஸ் கழக வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் BLUE FINGERS ஐ எதிர்த்து REDEYES மோதியது. இடம்பெற்ற இப் போட்டியில் ஆரம்பம் முதல் இரு அணிகளும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிக்காட்டின. முதலில் BLUEFINGERS 1 கோலை பதிவு செய்தது.

தொடர்ந்து இடைவேளையின் பின்பு ஆட்ட வேகத்தை அதிகரித்து REDEYES இறுதியில் 2 கோல்களை பெற்று வெற்றி அடைந்தது. இப் போட்டியில் ஆட்ட நாயகனாக வினிகரன் தெரிவானார். (கு)

# அராலி அண்ணா வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## ஞானமுருகன் வெற்றி



அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று நடைபெற்ற போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஞானமுருகன் அணி.

அணி சார்பாக வகின்சன் இரு கோல்களையும் போட்டார். (க)

# சென்.தோமஸ் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குள் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டு நிகழ்வின் ஒரு விளையாட்டாகிய கபடிப் போட்டி 23 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று நடை பெற்றது.

பரபரப்பாக நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் பருத்தித்துறை முனை சென்.தோமஸ் அணியும் பருத்தித்துறை ஐக்கியம் அணியும் இறுதிப் போட்டிக்குள் நுழைவ தற்கு பலப்பரீட்சை நடத்த விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில் சென் தோமஸ் அணி ஆரம்பத்தில் ஆக்கிரமிப்பு தாக்குதல் ஆட்டம் நடத்தியது.

இதனால் முதல் பாதி ஆட்டம் சென்.தோமஸ் அணியின் முழுமையான கட்டுப்பாட்டில் விழுந்தது. அப்போது 17.09 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென்.தோமஸ் அணி நீண்ட நேரமாக நுணுக்கங்கள் எதனையும் பயன்படுத்தாமல் விளையாட்டை நகர்த்தி கொண்டு சென்றது. இதனை பயன்படுத்தி ஐக்கியம் அணி வேகமாகவிளையாடிதமக்குரியபுள்ளிகளை பெற்று முன்னேறத் தொடங்கியது.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது சென் தோமஸ் அணி 33.27 என்ற புள்ளிகள் பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (கு)

# புத்தூர் கலைமதியை வீழ்த்தி சம்பியனாகியது இளவாலை மத்தி



ஞானதீபம் இளையோர் திறன் விருத்திமையம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டம் வென்றது.

நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை மத்தி விளையாட்டுக் கழகம் மோதியது. மிகவும் பரபரப்பாக நடை பெற்ற போட்டியில் 25:23 , 25:19, 25:19 என்ற செட் கணக்கில் இளவாலை மத்தி வெற்றி பெற்றது. அரையிறுதிப் போட்டியில் இளவாலை மத்தி ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தையும் புத்தூர் கலைமதி புத்தூர் வளர்மதியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (க)

## பல்கலை துணைவேந்...

பேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் மற்றும் மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர் சுப்பிரமணியம் ரவிராஜ் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

குறித்த தேர்தலில் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் 24 பேரில் 23 பேர் வாக்களித்திருந்தனர். ஒரு உறுப்பினர் மூவருக்கு வாக்களிக்கும் உரிமையை கொண்டிருந்தனர். இந்த வகையில் பேராசிரியர் சிறிசற்குணராஜா 17 வாக்குகளையும் பேராசிரியர் விக்னேஸ்வரன் 11 வாக்குகளையும் பேராசிரியர் வேல்நம்பி 09 வாக்குகளையும் வைத்திய நிபுணர் ரவிராஜ் 09 வாக்குகளையும் பெற்றனர்.

ஒரே எண்ணிக்கையிலான வாக்குகளை இருவர் பெற்றிருந்த காரணத்தால். இரண்டாவது தடவையாக குறித்த இருவருக்குமான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் வாக்காளர்கள் 23 பேரும் தலா ஒருவருக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் பேராசிரியர் வேல்நம்பி 14 வாக்குகளையும் வைத்திய நிபுணர் ரவிராஜ் 09 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களான பேராசிரியர் சிறிசற்குணராஜா, பேராசிரியர் விக்னேஸ்வரன், பேராசிரியர் வேல்நம்பி ஆகியோரின் பெயர்கள் செனட் சபைக்கு நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செனட் சபையின் ஊடாக மூவரின் பெயர்களும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்படுபவர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்படுவார்.

மேலும் தற்போதுள்ள துணைவேந்தரின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமையால் அதற்கு முன்னர் புதிய துணை வேந்தர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ-9)

## 10 கர்ப்பிணிகளுக்கு...

மார்கள் பன்றிக்காய்ச்சல் எனப்படும் H1N1 இன்புளுவன்சா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்த கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் நோயின் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் அனைவரும் காய்ச்சல் தொடங்கிய முதல் நாளிலேயே அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதால் தகுந்த சிகிச்சையினைப் பெற்றுக் குணமடைந்துள்ளனர்.

எனவே எந்தவொரு கர்ப்பவதிக்கோ அல்லது பிரசவித்த தாயாருக்கோ காய்ச்சல் ஏற்படின் உடனடியாக காய்ச்சல் ஏற்பட்ட முதலாவது நாளிலேயே அவர் அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

அத்துடன் பன்றிக் காய்ச்சல் தொற்றானது குறைவடையும் வரையில் கர்ப்பவதிகள் பொது மக்கள் கூடும் இடங்களான கோவில் திருவிழாக்கள், சந்தைகள், பேரூந்துப் பயணங்கள், புகையிரதப் பயணங்கள் ஆகிய இடங்களிற்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

அத்துடன், இந்நோயினால் பாதிப்புற்றோரைப் பராமரித்தல் என்பவற்றையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நோய் தொற்றுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக வருகை தரும் பொது மக்களுக்கு உடனடியாக உதவும் வகையிலும் ஏனையவர்களுக்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையிலும் காய்ச்சல் நோயாளருக்கான விசேட வெளி நோயாளர் சேவைப்பிரிவானது நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் சுற்றயல் வைத்தியசாலைகளான முழங்காவில், வேரவில், பூநகரி, பளை, அக்கராயன் குளம் மற்றும் தருமபுரம் வைத்தியசாலைகளிலும் காய்ச்சல் தொடர்பான இரத்தப் பரிசோதனைகளைச் செய்வதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே காய்ச்சல் ஏற்படும் எவரும் தாமதிக்காது அருகில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று உரிய வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தவொரு கர்ப்பவதியோஅல்லது பிரசவத்தின் பின்னரான தாயாரோ காய்ச்சல் ஏற்பட்டவுடன் அருகிலுள்ள அரச மருத்துவமனையை நாடவும்.

அங்கிருந்து மாவட்ட பொது மருத்துவமனைக்கு உங்களை பாதுகாப்பாகவும் உடனடியாகவும் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு உங்களது குடும்பநல உத்தியோகத்தரையோ அல்லது பொதுச்சுகாதார பரிசோதகரையோ நாடவும் என கிளிநொச்சி மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15,312)

## வீதியில் மக்கள்:...

கலைக்கழக கலைப்பீட மாணவர்கள், மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் புளியங்குள இளைஞர்கள் என பலர் நேற்றைய தினமும் பிலவுக்குடியிருப்பிற்கு சென்று ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பிலவுக்குடியிருப்பிற்கு விஜயம் செய்த மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இந்த மண் எங்களின் சொந்த மண், எம் காணி எம் உரிமை, எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும், எங்களை எங்கள் காணிகளில் சுதந்திரமாக வாழவிடுங்கள், எமது கோரிக்கைக்கு செவிசாய்க்குமா நல்லாட்சி அரசு, போன்ற பல்வேறு வாசகங்களை எழுதிய பதாதைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்து ஆதரவு வழங்கவேண்டும் என மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை இலங்கை ஆசிரிய சங்கத்தினரும் நேற்றைய தினம் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பிற்கு விஜயம் மேற்கொண்டதுடன், நல்லாட்சி அரசே நடிக்காதே, இராணுவமே வெளியேறு, விமானப்படையே வெளியேறு, கேட்பாரின்றி நினைத்தாயா? கேப்பாபுலவு மக்களை, இராணுவமே வெளியேறு, வீதியில் மக்கள் காணியில் இராணுவம் உள்ளிட்ட கோசங்களை எழுப்பியதுடன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் நாளாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## தலைசிறந்த பாடகர்...

பெற்றுவந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.10 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிறந்த பாடகரான நாடகக் கலைஞர் எஸ்.ஜே.சாந்தன், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராட்டகால எழுச்சிமிகு பாடல்களுக்கான பிரதான பாடகராக விளங்கினார்.

பிரபல நட்சத்திரப் பாடகராக விளங்கிய இவர், சிறந்த நடிகராகவும் காணப்பட்டார்.

முதன்முதலில் 1972 இல் கொழும்பு, செட்டித்தெரு கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்வையிடச் சென்றபோது அங்கு அவருக்கு பாடும் வாய்ப்பு கிடைத்தது.

இதன்போது "மருதமலை மாமணியே முருகையா" என்ற பாடலைப் பாடி மிகுந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டார். இதுவே இவரது கலைப்பயணத்தின் ஆரம்பமாக அமைந்ததுடன் இது இவரது முதல் மேடை அனுபவமாகவும் அமைந்தது.

இதன் பின்னர் இவர் வீதியில் செல்லும் போது இவரை அழைத்து தம்பி அந்த "மருதமலைப் பாடலை" பாடு என்று இவரது இரசிகர்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள்.

இதன் பின்னர் இவரது வீடு அமைந்துள்ள தெருவுக்கு வரும் "முகத்தார் வீடு" ஜேசுரட்ணம் என்பவர் இவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அழைத்துச் சென்று சிறுவர் மலர் நிகழ்ச்சியில் பாட வைத்துள்ளார்.

அதிலிருந்து வானொலி நிகழ்ச்சியில் நாடகத்திலும் நடிக்க ஆரம்பித்திருந்தார்.

1977 இல் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த இவர், 1981 இல் கண்ணன் இசைக்குழுவுடன் இணைந்து தனது கலை பயணத்தை ஆரம்பித்து மேடைகளில் பாடல்களை பாட ஆரம்பித்தார்.

அந்த இசைக்குழு 1982 இல் கலைக்கப்பட்டதன் பின் தனது பெயரிலேயே "சாந்தன் இசைக் குழு" என்ற பெயரில் இசைக் குழுவை ஆரம்பித்து அதன்மூலம் மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தார்.

சமகாலத்திலேயே இவர் தமிழீழ விடுதலை புலிகளின் அமைப்பின் முன்னணிப் பாடகராகவும் திகழ்ந்து எழுச்சிப் பாடல்கள் பலவற்றையும் பாடியிருந்தார்.

இறுதி யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் இராணுவத்தினர் விடுவித்த நிலையில் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட போதும் தனது இனிய குரலால் பக்திப் பாடல்களையும் கருத்தாழமிக்க திரையிசைப் பாடல்களையும் பாடி வந்துள்ளார்.

இத்தகைய திறமைமிக்க இவரது இழப்பு ஈழத்து இசைத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கணிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாடகர் சாந்தனின் உடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை யாழ்ப்பாணம் இன்பம் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் அன்னாரின் புகழுடல் மாங்குளம் எடுத்துச் செல்லப்பட்டு இன்று திங்கட்கிழமை நண்பகல் வரை வைக்கப்பட்டு பின்னர் மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று அன்னாரின் புகழுடல் கிளிநொச்சி விவேகானந்தர் இல்லத்தில் மக்களின் அஞ்லிக்காக வைக்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளதாக அறிய முடிகிறது. (செ-15,271,281)

## இளைஞர் குழு...

மேற்படி சம்பவத்தினால் அங்கு பதற்றம் நிலவி காணப்பட்டதோடு, பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தாவடி சந்தியில் இருந்து நூறு மீற்றருக்கு பக்கத்தில் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டு கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது அப்பகுதி ஊடாக இரண்டு மோட்டர் சைக்கிளில் வந்த நால்வர் கைகளில் வாள்களை வீசியபடி வந்துள்ளனர். எனினும் தாவடி சந்தியில் ஏற்கனவே நின்ற பொலிஸ் புலனாய்வு பிரிவினர் (சிஐடி) அவர்களை மறித்துள்ளனர்.

புலனாய்வு பிரிவினர் மறித்த போதிலும், அங்கு நிற்காமல் குறித்த நால்வரும் மோட்டார் சைக்கிளில் செல்ல முயற்சித்துள்ளனர். இதன்போது தாம் வைத்திருந்த கைத்துப்பாக்கியை காட்டி சிஐடியினர் மிரட்டியுள்ளனர். அப்போதும் அங்கு நிற்காமல் வாள்களை வீசியபடி இளைஞர் குழு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இந்த சம்பவங்கள் நடைபெறும் போது போக்குவரத்து பொலிஸார் நூறு மீற்றர் தூரத்திலும்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மோட்டார் சைக்கிளுடன் நின்ற தாகவும் தெரிவிக்கும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், வாள்களுடன் சென்ற சமூகவிரோதிகளை கைது செய்ய எந்த நவடிக்கையும் பொலிஸ் தரப்பு எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த வாள் கொண்ட குறித்த குழுவினர் அங்கிருந்து முற்றாக செல்லும் வரை அப்பகுதி ஊடான போக்குவரத்தை பொதுமக்கள் அச்சம் காரணமாக தவிர்த்திருந்ததாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## எதிர்பாராத வகையில்...

கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் யுத்தத்தின் போது அங்கவீனமான படைவீரர்களை கூட்டு எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்த பந்துல குணவர்தனவிடம் ஆட்சி மாற்றம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த பந்துல குணவர்தன அரசாங்கத்திற்கு தெரியாமல் தானே அரசாங்கம் கவிழ்க்கப்படுகின்றது. ஆகவே நீங்கள் எண்ணுவதற்கு மாறாகவே அரசாங்கம் மாற்றமடையும்.ஜனாதிபதி தேர்தல் ஒன்றின் ஊடாக பிரதமர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்எப்போதும் நடைபெறாத வகையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். ஆகவே நினைக்காத ஒன்று நடைபெறும் அதனை நாம் நடத்திக்காட்டுவோம். மகிந்த ராஜபக்ஷ நாட்டைப் பொறுப்பேற்பார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்ப மீதமாக உள்ள ஒருவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே இருக்கின்றார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பெரும்பாலானவர்கள், கூட்டு எதிர்கட்சியின் பெரும்பாலானவர்கள், ஏனைய அரசியல் கட்சிகளின் பெரும்பாலானவர்கள், மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்குகின்றனர். அதுவே யதார்த்தம் என்றார் பந்துல.

இதேவேளை நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் பொருளாதார ஆய்வு பிரிவு நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, திறைசேரி முறிகள் விவகார சர்ச்சை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய வங்கியில் பாரிய கொள்ளை இடம்பெற்று 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைகின்றன. இதனால் நாடு தொடர்பில் காணப்பட்ட நம்பிக்கை முற்றாக இல்லாது போயுள்ளது. பூளும் பேர்க் நிறுவனம், மிகவும் அவதான மிக்க நாடாக இலங்கையை பெயரிட்டுள்ளது. சட்டவாதிக்கம் வீழ்ச்சி அடைந்த நாடாக இலங்கையை சட்டவாதிக்கம் தொடர்பில் கணிப்பிடும் நிறுவனம் கூறியுள்ளது. கடந்த வாரம் 15 ஆம் திகதி முன்னதாக அமெரிக்க நிறுவனமொன்று தமது முதலீடுகளை மீளகொண்டு சென்றுள்ளது.

234 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீடுகள் திரும் பிச் சென்றுள்ளன. மத்திய வங்கி போன்ற நிறுவனங்களில் இவ்வாறான மோசடி இடம்பெற்றதாக அறிந்த பின்னர் முதலீட்டாளர்கள் நாட்டில் இருந்து வெளியேறி வேறு நாடுகளில் முதலிடச் சென்றுவிடுவார்கள். நம்பிக்கை அடிப்படையிலேயே முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய வங்கி முறை கேட்டை அடிப்படையாக கொண்டு நடைபெற்ற செயற்பாடுகளின் ஒட்டு மொத்த பிரதிபலனாக 10 மில்லியன் ரூபாயிற்கு அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் தலா வருமானத்தை விட அதிகமாக இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கியின் அறிக்கை அடுத்த மாதம் வெளியான பின்னர் சரியான தரவுகளை தரமுடியும் என பந்துல தெரிவித்தார். (செ-11)

## சர்வதேச நீதிபதிகளை...

பொலநறுவையில் நேற்று முன்தினம் புதிய நீதிமன்றத் தொகுதியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டிய பின்னர், உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

"வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்க முடியாது என்ற தகவலை ஐ.நா.பொதுச்செயலர், ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் மற்றும் சக்திவாய்ந்த மேற்குலக நாடுகளின் தலைவர்களுக்கும் தெரிவித்து விட்டேன்.

நாட்டின் சட்டம் மற்றும் அரசியலமைப்பு வரையறைகளின் படி, எந்தவொரு வழக்கிலும் வெளிநாட்டு நீதிபதிகளை எமது நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது.

அவ்வாறு நாம், வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வருவதானால், நாட்டின் சட்டங்களையும் அரசியலமைப்பையும் மாற்ற வேண்டும்.

இலங்கையில் உள்ள நீதிபதிகள், கல்வி, மதிநுட்பம், ஆற்றல், அனுபவம் ஆகியவற்றில், உலகின் வேறெந்த நீதிபதிகளையும் விட இரண்டாம் தரமானவர்கள் அல்ல. அவர்கள் எந்த உள்நாட்டு மற்றும் அனைத்துலக விவகாரங்களையும் கையாளக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள்.

எனவே இலங்கை தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளின் சேவையை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றும்" அவர் தெரிவித்தார். (இ-7)

# அதிசக்தி வாய்ந்த...





தென்பட்டது. இதனையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டு நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் வருகை தந்து விசாரணை மேற்கொண்டதில் அப்பகுதி முன்னர் விடுதலைப் புலிகளின் முகாமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவினைப் பெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு அப்பகுதி தோண்டி சோதனையிடப்பட்டது.

அப்போது விடுதலைப் புலிகளினால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 78 குண்டுகள் மீட்கப்பட்டது.

இக் குண்டுகள் TNT வெடி மருந்துகள் கொண்டு நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்ததும் ஆபத்தானதுமான வெடி பொருள் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இவை நேற்று பிற்பகல் செயலிழக்கச் செய்யப்பட்டது எனவும் பொலிஸார் பின்னர் தெரிவித்திருந்தனர். (செ-60)

# ஜெனிவா அமர்வு இன்று...

யாளர் செய்ட் அல் ஹுசேன் எழுத்துமூல அறிக்கையை எதிர்வரும் 22ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. இதன்போது ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பாக உரையாற்றவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 2ஆம் திகதியும், 15ஆம் திகதியும் ஐ.நா விசேட நிபுணர்களின் இலங்கை தொடர்பான அறிக்கைகள் குறித்த விவாதமும், 23ஆம் திகதி ஐ.நா தீர்மானம் தொடர்பான விவாதங்களும் நடைபெறவுள்ளன.

சிறுபான்மை மக்களின் விடயங்களை ஆராயும் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் நாடியாவின் இலங்கை தொடர்பான அறிக்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் மார்ச மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்துடன், சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா விசேட நிபுணர் வோன்மென்டோஸ் முன்வைத்த அறிக்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

KBK ACCOUNTING CENTRE
(கணக்கீட்டுக்கான பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கான நிலையம்)
கிளை 01 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். Sat & Sun → 2 - 8pm
கிளை 02 பலாலி வீதி, கந்தர்மடம் (கந்தர்மடச்சந்தி ) Thu, Fri → 3.30 - 6.30pm
ACCOUNTING - Mr.BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip.in-ACC(ATI), Dip.in.Edu (OUSL), M.Com (HONS)
(Tutorial Staff)
கணக்கீடு → A/L 2017 & Day, A/L 2018, A/L 2019
வணிகக்கல்வியும் கணக்கீடும் → O/L 2017, Grade 10
தமிழ், ஆங்கில மொழி மூலம் (8052)
உங்கள் அனுமதிகளுக்கு:-0772168884

# வடக்கில் இன்று...

பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் நில விடுவிப்பு போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்ற வரும் நிலையில் மக்களின் நியாயமான இப்போராட்டம் வெற்றிபெற வேண்டுமென பலரும் தமது ஆதரவினை வழங்கிகொண்டிருக்கின்றனர். அந்த வகையில் கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கேப்பாப்பிலவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அங்கு சென்றிருந்தனர். அப்போது அங்கு அனைவரும் கூடி கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாணம் தழுவிய ஹர்த்தால் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்திருந்தனர். அது 27 ஆம் திகதி என சிலரால் கூறப்பட்டு வந்தது.

அச்செய்தி கடந்த சில நாட்களாக இணையத்தளங்களில் பரவலாக வெளியாகியிருந்த நிலையில் மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் ஹர்த்தால் தொடர்பாக கேட்டபோது ஹர்தாலுக்குரிய ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படாத காரணத்தால் இன்று நடைபெறும் என தெரிவித்த ஹர்த்தால் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-9)

# மங்கள, ஜயம்பதி...

இருவரும் ஜெனிவா அமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த அமர்வின் போது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த மேலும் 18 தொடக்கம் 24 மாதகால அவகாசத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் கோரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தீர்மான அமுலாக்கத்திற்கு நிதி உதவிகளை வழங்குமாறும் அவர்கள் கோரவுள்ளனர்.

தற்போதுள்ள தீர்மானத்தை உன்னிப்பான சர்வதேச கண்காணிப்புடன் அமுல்படுத்தும் வகையிலான தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதுடன், இதற்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மொன்றிநீக்ரோ ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கவுள்ளன.

எனினும் இந்த தீர்மான உள்ளடக்கங்கள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க செயலணியின் பல உறுப்பினர்களும் ஜெனிவா செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

34ஆவது ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் அடுத்த மாதம் 22ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்த் ராத் அல் ஹுசைன், இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க உள்ள நிலையில் கடந்த வாரம் ஜெனிவா சென்றிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தீர்மான அமுலாக்கத்தில் சர்வதேச கண்காணிப்பு இல்லாவிடின் அதனை அமுல்படுத்துவதற்கு மேலதிக காலஅவகாசத்தை வழங்க வேண்டாம் என சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் தற்போதுள்ள தீர்மானத்தை அமுல்படுத்த மேலதிக கால அவகாசம் வழங்கும் நடவடிக்கை ஊடாக, சர்வதேசத்தில் இருந்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் மறைந்துவிடும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் மேலதிக காலஅவசாகம் வழங்குவதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ள அதேவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனது கடுமையான ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது. (செ-11)

KINGS ELECTRONICS(PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
SPECIAL OFFERS
LED TV'S
Samsung 32" -29900
Hisence 32" -24500
Sony 40" -64900
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -28500
3 YEARS WARRANTY
அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=
SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
10 YEARS WARRANTY
SONY DVD Player
ONE YEAR WARRANTY
PRICE RS 5,250/=
Furnitures
Toys
Electronics
Baby Care
Glass TV Stand
10,200/=
WEB: WWW.MYKINGS.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி
அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை
365
72
(Express Service)
(Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536
DHL aramex FedEx

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.